Registered as a News Paper in Sri lanka

விலை : ரூபா 10 .00

தினப்பதிப்பு
# தினமுரசு
THINAMURASU

எப்பொழுதும் உங்கள் பயணத்தில் அன்பாக
SPICE TRAVELS & TOURS (PVT) LTD®
IATA
C/432
412, First Floor, Hospital Road, Jaffna.
(Adjoining Sangeetha Mobile Links)
Fly Line
Keethan - 0773 916 416
Tharshy - 0773 915 530

முரசு – 01 | திருவள்ளுவர் ஆண்டு 2041 | தை 28 | வெள்ளிக்கிழமை | (11.02.2011) | பக்கங்கள் 12 | ஓசை – 134

# ஆயுதக் கொள்வனவுக்கு அரசு மீது அழுத்தம்; தப்பித்துக் கொள்ளத் துடிக்கும் ஆட்சிபீடம்

(கராச்சி)

புலிகளுடனான யுத்தம் நிறைவடைந்துள்ள போதிலும் தொடர்ந்தும் ஆயுதங்களைக் கொள்வனவு செய்யும்படி இலங்கை அரசுக்கு பல வெளிநாடுகளிலிருந்து கடும் அழுத்தங்கள் பிரயோகிக்கப்பட்டு வருகின்றன.

இதனால் இப்போதும் கொழும்புக்கு படையெடுத்துவரும் ஆயுத விற்பனை முகவர்களைச் சந்திப்பதை எவ்வாறு தவிர்த்துக்கொள்ளலாம் என்று இலங்கை அரசின் உயர் தலைவர்கள் தலையைக் குடைந்துகொண்டுள்ளனர்.

பாகிஸ்தானிய அதிபர் அசீப் அல் சர்தாரி [Asif Al Zardari] மற்றும் பாகிஸ்தானிய இராணுவத் தளபதி ஜெனரல் கயானி [Kaynai] ஆகியோரது கொழும்புக்கான பயணங்களின்போது இலங்கை நடந்துகொண்ட விதம் கொழுமபிலுள்ள இராஜதந்திர வட்டகைகளில் சில ஊகங்களை ஏற்படுத்தியிருக்கிறது.

கடந்த ஆண்டு நவம்பர் 27 ஆம் நாளன்று பாகிஸ்தானிய அதிபர் இலங்கைக்கான பயணத்தினை மேற்கொண்டிருந்தார். இலங்கையில் போர் இடம்பெற்றிருந்த காலப்பகுதியில் இலங்கை இராணுவத்திற்குத் தேவையான அதிகளவிலான உதவிகளைப் பாகிஸ்தான் வழங்கியிருந்தது என்பது வெளிப்படையான தொரு அம்சம்.

புலிகளுக்கு எதிரான போரில் இலங்கை இராணுவத்திற்கு படைத்தளபாடப் பற்றாக்குறை ஏற்பட்டபோதெல்லாம், ஏனைய நாடுகள் கையினை விரித்துவிட பாகிஸ்தான்தான் மனமுவந்து தங்கு தடையற்ற (11 ஆம் பக்கம் பார்க்க)

### 'றோ'வுடன் இராஜதந்திரக் கூட்டு

# புலம்பெயர் தமிழரை கையாள அரசு வகுக்கும் புதிய வியூகம்

(லண்டன்)

**பிரித்தானியாவில் வாழும் புலம்பெயர் தமிழர்கள் இலங்கை அரசுக்கு எதிராக தொடர்ச்சியாக செயற்பட்டுவரும் அதேவேளை, இலங்கையின் நற்பெயருக்கும் அபகீர்த்தியை ஏற்படுத்தி வருகின்றனர். இவர்களின் இவ்வாறான செயற்பாடுகளைக் கட்டுப்படுத்துவதற்காக இலங்கை அரசு இந்திய உளவு அமைப்பின் உதவியுடன் தற்போது களமிறங்கியுள்ளது.**

இதற்கான செயல்வடிவம் கடந்த வாரம் முதல் அரங்கேற ஆரம்பித்திருக்கிறது. இதற்கான தீவிர முயற்சிகளில் கடந்த வருட இறுதியில் இருந்து வெளிவிவகார அமைச்சர் ஜி.எல்.பீரிஸ் நேரடியாக ஈடுபட்டு வந்திருக்கிறார்.

இதற்காக இந்திய உளவு அமைப்பான 'றோ'வின் உயர் அதிகாரிகளை பேராசிரியர் ஜி.எல். பீரிஸ் கடந்த மாத இறுதியில், ஒன்றுக்கு மேற்பட்ட தடவைகள் சந்தித்து மேற்படி விவகாரம் குறித்த இரகசியப் பேச்சுக்களில் ஈடுபட்டிருக்கிறார்.

கடந்த வருடம் பிரித்தானியாவிலும் மேற்கு நாடுகளிலும் இலங்கையின் நற்பெயருக்கு களங்கம் ஏற்படுத்தும் வகையிலான பல நிகழ்வுகள் நடந்தேறியிருக்கின்றன. இவற்றின் பின்னணியில் புலிகளுக்கு ஆதரவான புலம்பெயர் தமிழர்களின் அமைப்புக்கள் சம்பந்தப்பட்டிருக்கின்றன.

இவ்வாறான (11 ஆம் பக்கம் பார்க்க)



யாழ். பொலிஸ் நிலைய சிரேஷ்ட அதிகாரிகளுக்கான அணிவகுப்பு நேற்று யாழ். மத்திய கல்லூரியில் நடைபெற்றபோது... (52)

## "எங்களுக்கும் வேண்டும் ஓய்வூதியம்" யாழ். வங்கி ஊழியர்கள் நகரில் போராட்டம்

### இன்றும் பணிப்புறக்கணிப்புக்கு ஏற்பாடு



(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்ட அரச வங்கி ஊழியர்கள் தமக்கு ஓய்வூதியம் வழங்கப்பட வேண்டும் என்று கோரி யாழ். மத்திய பேருந்து நிலையத்திற்கு முன்பாக நேற்று நண்பகல் ஒருமணிநேர மறியல் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

நாடு பூராவும் அரச வங்கி ஊழியர்கள் மேற்கொண்டுவருகின்ற இத்தகைய போராட்டத்திற்கு (11 ஆம் பக்கம் பார்க்க)

## புலிகளுக்கு தடுப்புக்காவல்; அது சட்டவிரோதமானது

### உயர் நீதிமன்றம் நேற்று உத்தரவு

(கொழும்பு)

தடுப்புக்காவலில் வைக்கப்பட்டுள்ள புலிச் சந்தேக நபர்கள் தொடர்பிலான சட்ட நடவடிக்கைகளை துரிதப்படுத்துமாறு உச்சநீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

2009 ஆம் ஆண்டு முதல் தடுப்புக் காவலில் வைக்கப்பட்டுள்ள புலி என்று சந்தேகிக்கப்படும் நபர் ஒருவரின் அடிப்படை உரிமை மீறல் மனு மீதான விசாரணை வியாழனன்று நடைபெற்றது.

அப்போது பிரதம நீதியரசர் அசோக டி சில்வா அவர்கள், தற்போது தடுப்புக் காவலில் வைக்கப்பட்டுள்ள புலி சந்தேக நபர்களின் விவரங்கள் அடங்கிய பட்டியல் ஒன்றை சட்டமா அதிபரிடம் தாம் சமர்ப்பித்துள்ளதாக தெரிவித்தார்.

(12 ஆம் பக்கம் பார்க்க)

## வடக்கிற்கு வருகிறது கொங்கிரீட் வீதி

(கொழும்பு)



வடமாகாணத்தில் 125 கிலோ மீற்றர் நீளமான கொங்கிரீட் வீதிகளை நிர்மாணிக்க பொருளாதார அபிவிருத்தி அமைச்சு நடவடிக்கை எடுத்துள்ளது. இதற்கான நிதி ஒதுக்கப்பட்டுள்ளதாக அமைச்சின் பேச்சாளர் ஒருவர் தெரிவித்துள்ளார். இதன்படி வவுனியா, யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு மற்றும் மன்னார் (11 ஆம் பக்கம் பார்க்க)

## ஆசிய அபிவிருத்தி வங்கி உதவியுடன் வடமாகாணத்திற்கு குடிநீர்த் திட்டம்

(கொழும்பு)

ஆசிய அபிவிருத்தி வங்கி மற்றும் பிரான்ஸ் அபிவிருத்தி நிறுவனம் ஆகியவற்றின் உதவியுடன் வடமாகாணத்தில் 17880 மில்லியன் ரூபா செலவில் குடிநீர்த் திட்டம் ஒன்று ஆரம்பிக்கப்பட உள்ளது.

இத்திட்டத்தின் கீழ் யாழ்ப்பாணம் கிளிநொச்சி ஆகிய மாவட்டங்களுக்கான குடிநீர் விநியோகம் மேற்கொள்ளப்படவுள்ளது.

இத்திட்டத்துக்கான முழுமையான முதலீட்டில் 9810 மில்லியன் ரூபாவை ஆசிய அபிவிருத்தி வங்கியும், 5232 மில்லியன் ரூபாவை (11 ஆம் பக்கம் பார்க்க)

## யாழ். பொது நூலகத்தின் சிறுவர் பகுதி புனரமைப்பு

### சிங்கப்பூர் நிதியுதவி



(யாழ்ப்பாணம்)

யாழ். நூலகத்தின் சிறுவர் பகுதி சிங்கப்பூரின் நூலக அமைப்பு ரீதியாக சுமார் இரண்டரை கோடி ரூபா செலவில் புனர்நிர்மாணம் செய்யப்படவுள்ளதாக யாழ். நூல் நிலையத்தின் பிரதம நூலகர் தெரிவித்துள்ளார். இதன் ஆரம்ப (11 ஆம் பக்கம் பார்க்க)

# யாழில் மீலாத் விழா

(யாழ்ப்பாணம்)

கடந்த 20 வருடங்களுக்குப்பின்னர் யாழில் மீலாத் விழா உலகிற்கு ஓர் ஒளிவிளக்காகப் பிறந்த மாநபி (ஸல்) அவர்களின் பிறந்த தினம் எதிர்வரும் 16ஆம் திகதியாகும். இப்பிறந்ததினத்தை மீலாத் விழாவாக வருடாவருடம் முஸ்லிம் மக்கள் கொண்டாடி வருகின்றனர்.

இவ்வருடம் பஜார் ஜும்மாமொஸ்க் லேனிலும், சிவலை பள்ளிவாசலிலும், முஹம்மதியா மஸ்ஜித் (புதுப்பள்ளி) ஒஸ்மானியாக் கல்லூரியிலும் மிகவும் சிறப்பாக நடைபெறவிருக் கின்றன.

சிவலை பள்ளிவாசலில் ரபீயுல் அவ்வல்பிறை ஒன்றிலிருந்து பிறை 10வரை (16ஆம் திகதிவரை) மௌலூத்தும், விசேட பயான்களும் உலமாக்களினால் நடாத்தப்பட்டு வருகின்றன. கடந்த 20 வருடங்களுக்கு முன்னர் மீலாத் விழாக்களில் தென் இந்தியாவிலிருந்து விசேட பேச்சாளர்களும், பாடகர்களும் வந்து இஸ்லாமிய இன்னிசை நிகழ்த்தியமை கடந்த கால நினைவுகளை மீட்டுகின்றன.

# புதிய தனியார் பஸ் சேவை கிளிநொச்சியில் ஆரம்பம்

(கிளிநொச்சி)

கிளிநொச்சி மாவட்ட தனியார் பேருந்து சங்கத்தினால் மாணவர்கள் மற்றும் அரச ஊழியர்கள் நலன்கருதி புதிய பேருந்துசேவை ஒன்று நேற்றுமுன்தினம் முதல் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக சங்கத்தின் தலைவர் தெரிவித்தார்.

மேற்குறிப்பிட்டவர்களுக்கு சீரான பேருந்து சேவையை வழங்கும் பொருட்டு நாடாளுமன்ற உறுப்பினர் மு. சந்திரகுமாரின் பணிப்புரைக்கமைய இந்தச் சேவை ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்தார்.

இச் சேவை மாணவர்கள் மற்றும் அரச உத்தியோகத்தர்களுக்கானதாக அமைவதோடு, ஒருவாரகாலத்திற்கு இலவசமாக இச்சேவை மேற்கொள்ளப்படும் என்றும் அதன் பின்னர் வழமையான பேருந்து கட்டணத்திலிருந்து 2/3 பங்கு கட்டணத்துடன் பருவகால சீட்டு வழங்கப்பட்டு சேவை மேற்கொள்ளப்படும்.

இதன்பிரகாரம் தினமும் காலை 7 மணிக்கு முறிகண்டியில் இருந்து புறப்பட்டு பரந்தனைச் சென்றடையும் அதே பேருந்து, பிற்பகல் 2 மணிக்கு பரந்தனிலிருந்து புறப்பட்டு முறிகண்டியை சென்றடையும்.

அவ்வாறே காலை 7 மணிக்கு விசுவமடுவிலிருந்து புறப்பட்டு பரந்தனைச் சென்றடையும் அதேபேருந்து, பிற்பகல் 2 மணிக்கு பரந்தனிலிருந்து புறப்பட்டு விசுவமடுவைச்சென்றடையும் என அவர் மேலும் தெரிவித்தார். (29)

## மேக்கன்ரைல் பாதுகாப்புச்சேவை

**வெற்றிடங்கள்:- கனிஷ்ட பாதுகாப்பு உத்தியோகத்தர் (ஆண்கள்)**

தகைமை :- க.பொ.த (சா/த) பரீட்சையில் தமிழ், கணிதம் உட்பட இரு தடவைகளிற்கு மேற்படாதவாறு 6 பாடங்களில் சித்தி பெற்றிருத்தல் வேண்டும். நல்ல தேகாரோக்கியமும் நல்ல கண்பார்வையும் இருத்தல் வேண்டும். உயரம் 5'4"

வயதெல்லை :- 26 வயதிற்கு மேற்பட்டோர்

நேர்முகப் பரீட்சை:- 12.02.2011 அன்று காலை 10 மணிக்கு 651/12 நாவலர் வீதி, நல்லூர் யாழ்ப்பாணம் எனும் முகவரியில் அமைந்துள்ள அலுவலகத்தில் நடைபெறும்.

ஆவணங்கள்:-
- ✶ கிராம சேவகரின் நற்சான்றுப்பத்திரம் (6 மாதத்திற்குட்பட்டது)
- ✶ பிறப்பு அத்தாட்சிப்பத்திரம்
- ✶ கல்வித்தகைமைச் சான்றிதழ்கள்
- ✶ தேசிய அடையாள அட்டை
- ✶ உறவினரல்லாத இருவரின் நற்சான்றுப் பத்திரம்

மேற்குறிப்பிட்ட ஆவணங்களின் மூலப்பிரதியுடனும் போட்டோப் பிரதியுடனும் வருகை தரவும்.

**651/12 நாவலர் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.** (C/438) **- பணிப்பாளர்.**

# யாழ்ப்பாண அபிவிருத்திக்கு உறுதியான நடவடிக்கை

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாண அபிவிருத்திக்கான உறுதியான நடவடிக்கைகளினை யாழ்ப்பாண மாநகர சபை மேற்கொண்டுவருவதாக யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் இமெல்டா சுகுமார் தெரிவித்துள்ளார்.

புதிய வர்த்தக நிலையத்திற்கான கட்டடத் தொகுதியின் அடிக்கல் நாட்டு விழா நேற்று கஸ்தூரியார் வீதியில் இடம்பெற்றபோதே அவர் இதனைத் தெரிவித்தார்.

மேலும் இது தொடர்பாக அவர் கருத்துத் தெரிவிக்கையில்: யாழ்ப்பாணத்திற்கு தற்போது சுற்றுலாப் பயணிகளின் வருகை அதிகரித்து வருவதாகவும், ஒரு மாதம் ஒன்றரை இலட்சம் வரையிலான சுற்றுலாப் பயணிகள் யாழ்ப்பாணத்திற்கு வருகைதருவதாகவும் அவர்களைக் கவரும் வகையிலே யாழ்ப்பாணம் புதிய கட்டடத் தொகுதிகளுடன் அழகிய நகரமாக மிளிரவேண்டும் எனவும் அதற்கான உறுதியான நடவடிக்கையினை யாழ். மாநகர சபை மேற்கொண்டுவருவதாகவும் அவர் தெரிவித்தார்.

30 ஆண்டுகளான அனர்த்தத்தின் பின்னர் யாழ்ப்பாண மக்கள் சந்தோசத்துடன் வாழ்வதாகவும் அவர்களுக்கான தேவைகளைப் பூர்த்தி செய்து சமூக பொருளாதாரத்தை மேம்படுத்தி யாழ். மாநகரசபை தேவையான நடவடிக்கைகளை எடுக்குமெனவும் அவர் மேலும் தெரிவித்தார். (மி

## சிறு விளம்பரம்

**டயானா பிளாஸ்ரிக் தொழிலகம்**

சகல விதமான மோட்டார் சைக்கிள், வாகன உடைந்த பிளாஸ்ரிக் பொருட்கள் உத்தர வாதத்துடன் ஒட்டித்தரப்படும். உற்பத்திகளும் உண்டு.

கனகசபை லேன், சிவலிங்கப்புளியடி, யாழ்ப்பாணம். Tel - 021 222 8680, 0775925088 (R/017)

# மெய்வல்லுநர் போட்டி

(யாழ்ப்பாணம்)

யாழ். ஒஸ்மானியாக் கல்லூரியில் நாளை நண்பகல் 2 மணிக்கு வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி ஜின்னா மைதானத்தில் கல்லூரி அதிபர் எம்.எஸ். ஏ.எம். முபாரக் தலைமையில் நடைபெறும். இப்போட்டி நிகழ்வில் பிரதம அதிதியாக திருமதி அ.வேதநாயகம் (கல்விப்பணிப்பாளர் யாழ். கல்வி வலயம்) சிறப்பு அதிதியாக திருமதி வ. சிவபாலன் (யாழ்.கோட்டக்கல்விப் பணிப்பாளர்),கல்லூரியின் பழைய மாணவர்கள் பலரும் கலந்து சிறப்பிக்கவுள்ளார்கள். கடந்த 20 வருடங்களுக்கு முன்னர் இக்கல்லூரி விளையாட்டுத்துறையில் சிறப்பான இடம் வகித்தமை குறிப்பிடத்தக்கதாகும்.

## அரசாங்க அறிவித்தல்

**நயினாதீவு ஸ்ரீ நாகபூஷணி அம்மன் ஆலய வழிபடுநர் மகாசபைப் பொதுக்கூட்ட அறிவித்தல்**

ஊர்காவற்றுறை மாவட்ட நீதிமன்றின் கௌரவ நீதிபதியவர்களினால் 2011.02.08 ஆம் திகதி வழங்கப்பட்ட கட்டளைக்கமைவாக,

மேற்படி ஆலய வழிபடுநர் சபையின் மகாசபைப் பொதுக்கூட்டமானது எதிர்வரும் 2011.02.26ஆம் திகதி சனிக்கிழமை காலை 10.00 மணிக்கு நயினாதீவு ஸ்ரீ நாகபூஷணி அம்மன் ஆலய கல்யாண மண்டபத்தில் எனது தலைமையில் நடைபெறும்.

மேற்படி கூட்டத்தில் பங்குபற்றுதல், வழிபடுநர்சபை உறுப் புரிமைக்குப் போட்டியிடல், உறுப்புரிமைக்குத் தேர்வு செய்தல் சம்பந்தமாக பின்வரும் விடயங்களைக் கவனத்தில் கொள்ளவும்.

01. வழிபடுநர் சபையில் 2008, 2009, 2010 ஆகிய ஆண்டுக் காலப்பகுதியில் ஏதாவது ஒரு வருடத்தில் அங்கத்தவராக உள்ள வழிபடுநர்கள் வாக்களிக்கத் தகுதியானவர்கள் ஆகக் கருதப்படுவார்கள்.
02. வழிபடுநர் சபையில் 2008,2009,2010 ஆகிய ஆண்டுக் காலப் பகுதியான 03 வருடங்களும் தொடர்ச்சியாக அங்கத்தவராக உள்ள வழிபடுநர்கள் அறங்காவலர்சபை உறுப்புரிமைக்குப் போட்டியிட முடியும். அத்துடன் இக் காலப்பகுதியில் தொடர்ச்சியாக அங்கத்தவராக உள்ளவர்களே அறங்காவலர்கள் தெரிவில் முன்மொழியவோ, வழிமொழியவோ முடியும்.
03. அறங்காவலர்கள் சபையின் உறுப்புரிமைக்கு 09 வெற்றிடங்கள் காணப்படுகின்றன.
04. வேட்புமனுத் தொடர்பான படிவங்களை 2011.02.10 ஆம் திகதியிலிருந்து பிரதேச செயலகம், வேலணையில் பெற்றுக் கொள்ளலாம்.
05. இவ் உறுப்புரிமைக்கான வேட்புமனுக்களை 2011.02.18 ஆம் திகதிக்கு முன்னர் பிரதேச செயலர், பிரதேச செயலகம், வேலணை எனும் முகவரிக்கு நேரடியாகவோ அல்லது பதிவுத்தபால் மூலமாகவோ அனுப்பி வைத்தல் வேண்டும்.
06. இவ் உறுப்புரிமைக்கு விண்ணப்பித்த பின்னர் தேர்தலில் இருந்து விலகிக்கொள்ள விரும்பும் வேட்பாளர்கள் 2011.02.22 ஆம் திகதிக்கு முன்னர் பிரதேச செயலர், பிரதேச செயலகம், வேலணை எனும் முகவரிக்கு எழுத்து மூலம் அறிவித்தல் வேண்டும்.

இவ் அறிவித்தலை தனிப்பட்ட அறிவித்தலாக அனைத்து வழிபடுநர் சபையின் அங்கத்தவர்களும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றீர்கள்.

முத்துலிங்கம் நந்தகோபாலன்,
பிரதேச செயலர்,
தீவுகள் தெற்கு. (C/437)

**பிரதேச செயலகம்,
வேலணை.**
2011.02.10

## உங்கள் அன்புச் செல்வங்களின் பிறந்தநாள் வாழ்த்துக்கள் தினமுரசில் முற்றிலும் இலவசமாக!!




**உங்கள் பத்து வயதுக்குட்பட்ட சிறார்களின் பிறந்த நாள் கொண்டாட்டங்களில் "தினமுரசு" தினப்பதிப்பும் இணைக்கின்றது. உங்களது சிறாரின் புகைப்படத்துடன் கீழ் வரும் கூப்பன்களில் ஐந்தினை நிரப்பி எமக்கு அனுப்பி வையுங்கள்.**

**தினமுரசு தினப்பதிப்பு உங்கள் அன்புச்செல்வத்தின் பிறந்த நாளன்று புகைப்படத்துடன் கூடிய பிறந்த நாள் செய்தியைப் பிரசுரிக்கும் என்பதை மனமகிழ்வுடன் தெரிவிக்கின்றோம்.**

### வாழ்க வளமுடன்

சிறாரின் பெயர் :- ..................................................

முகவரி :- ..................................................

பிறந்த ஆண்டு :- ..................................................

கூப்பன்கள் ஐந்தும், புகைப்படமும்

இத்துடன் இணைக்கப்பட்டுள்ளன :- ..................................

பெற்றோர் ஒப்பம்.

எந்த ஒரு காரியத்தையும் பரபரப்புடன் செய்யக் கூடாது. தூய்மை,பொறுமை விடாமுயற்சி அன்பு ஆகியவை வெற்றிக்கு இன்றியமையாதவையாகும்.

- விவேகானந்தர்

தினப்பதிப்பு
தினமுரசு
THINAMURASU

இல:373, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி : 0212221811
thinamurasu@live.com
thinamurasupaper@hotmail.com

## காலத்தின் கட்டாய தேவை

யாழ்.குடாநாட்டில் போதியளவு அத்தியாவசிய உணவுப் பொருட்கள் கையிருப்பில் இருப்பதாகவும், எந்தப்பொருளுக்கும் தட்டுப்பாடு ஏற்பட இடமில்லை எனவும், யாழ்ப்பாண வர்த்தகர் சங்கத்தினர் அறிவித்துள்ளனர். இவர்களின் இந்த அறிவிப்பு பாவனையாளர்களுக்கு ஓரளவு திருப்தியளிக்கக் கூடியதாகவுள்ளது.

அச்சு ஊடகங்களும், இலத்திரனியல் ஊடகங்களும் உணவுப் பொருட்களுக்குப் பாரிய தட்டுப்பாடு ஏற்படலாம் என்றும், கையிருப்பில் உள்ள பொருட்களின் விலைகள் அதிகரித்திருப்பதாகவும் அடிக்கடி செய்திகளை வெளியிட்டு வருகின்ற நிலையிலேயே வர்த்தகர் சங்கம் இதனை அறிவித்துள்ளது.

இச்செய்திகளைத் தொடர்ந்து மக்கள் தமக்கே உரித்தான பாணியில் - குறிப்பாக பணம் படைத்தவர்கள் தேவைக்கு மேலதிகமாகப் பொருட்களைக் கொள்வனவு செய்து வீடுகளில் சேர்த்து வைத்து வருகின்றார்கள்.

முன்னொரு காலத்தில் யுத்தம் நடைபெற்ற வேளை, தருணம் பார்த்துப் பொருட்களைப் பதுக்கி வைத்து கறுப்புச் சந்தையில் பெரும் பணம் சம்பாதித்தவர்த்தகர்களும் இன்று எம் மத்தியில் உள்ளனர்.

ஆனால், இன்றுள்ள நிலை அப்படியான நிலை அல்ல, வர்த்தகத்தில் நிலவும் போட்டித்தன்மையே இதற்குப் பிரதான காரணமாக அமைந்துள்ளதுடன், பதுக்கும் நிலையிலும் ஒருவருமில்லை.

எமது கரங்களில் உள்ள ஐந்து விரல்களும் எப்படி மாறுபட்டவையாக இருக்கின்றனவோ அப்படியே தான் எம் மத்தியில் உள்ள வர்த்தகர்களும் மாறுபட்ட தன்மை உடையவர்களாகக் காணப்படுகிறார்கள்.

ஒரு பானை சோற்றுக்கு ஒரு சோற்றை எடுத்து பதம் பார்ப்பது போல் வர்த்தகர்களையும் பதம் பார்த்து நாம் ஒரு முடிவுக்கு வரக்கூடாது.

பொருட்களின் தட்டுப்பாட்டுக்கும், விலை உயர்வுக்கும் எழுந்தமானத்தில் வர்த்தகர்களைக் குறைகூற முடியாது. ஏ-9 பாதை திறப்பிற்குப் பின்பு படிப்படியாக சீரான நிலைக்கு வந்த வர்த்தகச் செயற்பாடுகளை அண்மைக்காலமாக நிலவி வரும் சீரற்ற காலநிலைகள் வெகுவாகப் பாதித்துவிட்டது. இதற்கு நாம் எவரையும் குறைகூற முடியாது.

குடாநாட்டு மக்களின் ஒட்டுமொத்தமான நுகர்வுத் தேவையைத் தனியார் வர்த்தக நிறுவனங்கள் மட்டும் பூர்த்தி செய்வதாக இல்லை.

யுத்த காலத்தில் மக்களைப் பட்டினிச்சாவின் விளிம்பில் இருந்து காப்பாற்றிய கூட்டுறவு நிறுவனங்களை நாம் இலகுவில் மறந்துவிட முடியாது.

போதியளவு நிதிவளம் கூட்டுறவு நிறுவனங்களிடம் இன்மையால், தம்மைச் சார்ந்த மக்களின் உணவுத் தேவையைத் தற்போது பூர்த்தி செய்ய முடியாதுள்ள போதும், தனியார் நிறுவனங்களிலும் பார்க்கச் சகாய விலையில் உணவுப் பொருட்களைத் தற்போது விநியோகம் செய்து வருவதை இங்கு குறிப்பிடாமல் இருக்க முடியாது.

இந்நிறுவனங்களைவிட யாழ்.நகரின் மத்தியில் உள்ள ஒரேயொரு சதொசா விற்பனை நிறுவனத்தின் மூலம் அத்தியாவசிய உணவுப் பொருட்களைச சகாய விலையில் பெற்றுக்கொள்ளக்கூடியதாகவும் உள்ளது.

நெற்பயிர் விளை நிலங்களையும், தானியம் மற்றும் மரக்கறிப் பயிர் விளை நிலங்களையும் மழை வெள்ளம் அழித்தாலும், உடனடி உணவுப் பொருட்களுக்குத் தட்டுப்பாடு ஏற்படும் என்பது தவிர்க்க முடியாது. உணவுப் பொருட்களுக்கு ஏற்படும் தட்டுப்பாடு குடாநாட்டு மக்களைப் பெரிதும் பாதிக்காது போனாலும், வன்னி மக்களை நிச்சயம் பாதித்தே தீரும்.

இந்தப் பாதிப்பிலிருந்து அவர்களைக் காப்பாற்றச் சம்பந்தப்பட்ட அரச அதிகாரிகளும் மற்றும் சமூக ஆர்வலர்களும் முனைப்புடன் செயற்பட வேண்டியது காலத்தின் கட்டாய தேவையாகும்.

- ஆசிரியர்.

# இலங்கையில் ஏற்பட்ட வெள்ள அனர்த்தம் மோசமான பாதிப்பை ஏற்படுத்தியுள்ளது

## ஒக்ஸ்பாம் நிறுவனம் கவலை

(கொழும்பு)

இலங்கையில் குறுகிய காலத்தில் இரண்டாவது முறையாக வெள்ள அனர்த்தம் ஏற்பட்டிருப்பதைத் தொடர்ந்து நிலைமைகள் மோசமாகிச் செல்கிறது என ஒக்ஸ்பாம் என்ற அனைத்துலக தொண்டு நிறுவனம் தெரிவித்தது.

முதலாவது தடவை ஏற்பட்ட வெள்ள அனர்த்தத்தின் போது இலங்கையில் ஒரு மில்லியனுக்கும் அதிகமானவர்கள் பாதிக்கப்பட்டிருந்தனர்.

தற்போது மீண்டும் ஏற்பட்டிருக்கும் வெள்ளம் வாழ்வியல் நிலைமையினை மேலும் மோசமாக்கியிருக்கிறது. தை மாதத்தின் நடுப்பகுதியில் ஏற்பட்ட பெருவெள்ளத்தினைத் தொடர்ந்து தங்களது வாழ்வாதாரங்களையும் சொத்துக்களையும் இழந்து நின்ற மக்கள் ஊர் திரும்பியிருந்தனர்.

ஆனால், மீண்டும் ஏற்பட்ட இவ் வெள்ளத்தைத் தொடர்ந்து இவர்கள் மீண்டும் இடம் பெயர்ந்துமுள்ளார்கள். தேவைகள் அதிகமாகவுள்ளன. பெரும் தொற்றுநோய்த் தாக்கத்திற்கு உள்ளாகும் ஆபத்தினையும் இந்த மக்கள் சந்தித்து நிற்கிறார்கள் என ஒக்ஸ்பாம் நிறுவனத்தின் பரப்புரை முகாமையாளர் சிறிவர்த்தன தெரிவித்தார்.

இலங்கையின கிழக்கு, வடக்கு, மத்திய மற்றும் வடமத்திய மாகாணங்களிலுள்ள 18 மாவட்டங்களை இந்த இரண்டாவது தடவையாக ஏற்பட்ட வெள்ள அனர்த்தம் பெரிதும் பாதித்திருக்கிறது.

ஒரு மில்லியனுக்கும் அதிகமானவர்கள் பாதிக்கப்பட்டிருந்ததோடு 320,000 பேர் தங்களது வீடுகளை விட்டு வெளியேறி இடைத்தங்கல் முகாம்களில் தங்கவேண்டிய நிலைக்குத் தள்ளப் பட்டிருக்கிறார்கள். வீடுகள், வீதிகள், விவசாய நிலங்கள் பெரும் சேதத்திற்கு உளளாகியிருக்கிறது. மீட்பு மற்றும் நிவாரண நடவடிக்கைகளைச் சரிவர மேற்கொள்ள முடியாத நிலைக்குச் சில பிரதேசங்களில் நிலைமைகள் மோசமாகவுள்ளன.

நிலைமை மிகவும் மோசமானதாக உள்ளது. அவசர நிவாரண உதவிகளுக்கு அப்பால் பாதிக்கப்பட்ட பிரதேசங்களின் உணவுப் பாதுகாப்பு தொடர்பாக கரிசனையும் எழுகிறது. வெள்ளத்தினால் பாதிக்கப்பட்ட மாவட்டங்களில் 90 சத வீதமான நெற்செய்கைகள் முற்றாக அழிந்துவிட்டன.

இலங்கையில் வெள்ளத்தினால் பாதிக்கப்பட்ட மக்களின் தேவைக்காக அனைத்துலக சமூகம் அதிக நிதியுதவிகளை வழங்கவேண்டியது அவசியமாகி இருக்கிறது. இதுவரை 11.6 மில்லியன் அமெரிக்க டொலர் நிதி வெள்ள அனர்த்தத்திற்காகக் கிடைக்கப்பெற்றிருக்கிறது.

ஐ.நா விடுத்த அவசர அழைப்பினைத் தொடர்ந்து வெறும் 7.7 மில்லியன் டொலர் நிதியுதவியே ஐ.நாவிற்குக் கிடைத்திருப்பதும் இங்கு குறிப்பிடத்தக்கது.

கிழக்கு மற்றும் வட மத்திய மாகாணங்களிலுள்ள 120,000 மக்களுக்கு ஒக்ஸ்பாம் நிறுவனம் ஏற்கனவே உணவு மற்றும் குடிநீரினைப் பெற்றுக் கொடுத்திருக்கிறது. வெள்ள அனர்த்தத்தினைத் தொடர்ந்து இடம் பெயர்ந்த மக்களுக்குச் சமைத்த உணவு, குடிநீர், கூரை விரிப்புக்கள், சுகாதாரப் பொதிகளையும் ஒக்ஸ்பாம் நிறுவனம் வழங்கியிருந்தது.

# கட்டாக்காலி கால்நடைகளால் சிரமத்தை எதிர்கொள்ளும் மக்கள்

## சிரமங்களை எதிர் கொள்ளும் பயணிகள்

(கொக்குவில்)

கட்டாக்காலி கால்நடைகளின் புழக்கம் மீண்டும் யாழ்.நகரப் பகுதிகளில தலையெடுத்துள்ளதாகப் பிரயாணிகள் முறைப்பாடு தெரிவிக்கின்றனர்.

காலையில் வேலைக்கு மற் றும் பாடசாலைகளுக்குப் போகும் போதும் மாலையில் வீடுகளுக்குத் திரும்பும்போதும் துவிச்சக்கர வண்டிகள், மற்றும் வாகனங்கள், பாதசாரிகள் சுறுசுறுப்பாகச் செல்கையில் கால்நடைகளின் குறுக்கீட்டால் விபத்துகளில் மாட்டிக்கொள்ள நேர்வதாகவும் அவர்கள் கூறுகின்றனர்.

இது சம்பந்தமான செய்திகள் பல பிரஸ்தாபிக்கப்பட்டபோதும் சம்பந்தப்பட்டவர்கள் இன்னும் நடவடிக்கை எடுக்காமல் இருந்து வருவது கவலை அளிப்பதாக பாதசாரிகள் தெரிவிக்கின்றனர்.

யாழ் நகர வீதிகள் சேதமடைந்திருக்கும் சூழ்நிலையில் கால்நடைகளின் குறுக்கீடும் பயணிகளின் பொறுமையை மேலும், மேலும் சோதித்துப் பார்ப்பதாக இருப்பது குறிப்பிடத்தக்கது. (68)

# புத்தூர் - மட்டுவில் வீதியை விரைவில் புனரமைக்க கோரிக்கை

யாழ்ப்பாணம் - பருத்தித்துறை பிரதான வீதியின் புத்தூர் சந்தியிலிருந்து மட்டுவிலிற்குச் செல்லும் புத்தூர் - மட்டுவில் வீதி நீண்டகாலமாகப் பாரிய அளவிலான சேதங்களுக்கு உள்ளாகி இருப்பதால் இவ்வீதியூடாகச் செல்லும பாதசாரிகள் மற்றும் பிரயாணிகள் பல்வேறு இன்னல்களுக்கு மத்தியிலேயே பயணத்தை மேற்கொண்டு வருகின்றனர்.

புத்தூர் சந்தியிலிருந்து ஊரணி வரையான சுமார் இரண்டரைக் கிலோமீற்றர் நீளமான பகுதி பாரிய அளவில் சேதமடைந்து பெரும் குழிகள் ஏற்பட்டிருப்பதால் மழைக் காலங்களின் போது இப்பாரிய குழிகளில் மழைவெள்ளம் தேங்கி நிற்பதால் இக்குழிகளைக் கடந்து செல்வதில் வாகனங்களும், பயணிகளும் பெரும்பிரயத்தனத்திற்கு மத்தியிலேயே பயணத்தைத் தொடர வேண்டியுள்ளது. வடக்கின் வசந்தம் அபிவிருத் தித்திட்டத்தின் கீழ் இவ் வீதியைத் திருத்தியமைப்ப தற்கான நடவடிக் கைகள் தொடங்கப்படவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ள போதிலும் இவ்வீதி மிக மோசமான நிலையில் இருந்து வருவது குறிப்பிடத்தக்கது. (03)

### இராணுவத்திலிருந்து விலகியவர்களுக்கு நாளையுடன் மன்னிப்புக்காலம் முடிவு

(கொழும்பு)

இராணுவத்திலிருந்து விலகியவர்கள் தமது சேவையை முடிவுக்குக் கொண்டுவருவதற்கான மன்னிப்புக் காலம் நாளை சனிக்கிழமையுடன் முடிவடைகிறது என இராணுவ ஊடகப்பேச்சாளர் மேஜர் ஜெனரல் உபயமெதவல தெரிவித்தார்.

இந்த மன்னிப்பை பயன்படுத்தி 3 அதிகாரிகளும் சகல இராணுவ தரப்புக்களைச் சேர்ந்த 1500 இராணுவ வீரர்களும் சரணடைந்துள்ளனர்.

இராணுவச்சட்டத்தின் பிரகாரம் 4 ஆயிரத்து 420 இராணுவ வீரர்களையும் 10 அதிகாரிகளையும் கைது செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

40 ஆயிரம் இராணுவ வீரர்கள் இராணுவத்தில் இருந்து விலகியுள்ளனர்.

சீரற்ற காலநிலையால் பாதிக்கப்பட்டுள்ள மக்களுக்கு இராணுவம் தொடர்ந்து நிவாரணம் வழங்கி வருவதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

# மழை,வெள்ளநிலை தொடர்ந்தால் தேர்தல் குறித்து மீள் பரிசீலனை


(கொழும்பு)

மழை மற்றும் வெள்ள நிலைமை தொடரந்தால், அதனால பாதிப்பு ஏற்படும் பிரதேசங்களில் தேர்தலை நடத்துவதா இல்லையா? என்ற தீர்மானம் ஒன்றை எடுக்க நேரிடும் என தேர்தல் ஆணையாளர் தயானந்த திஸாநா யக்க தெரிவித்துள்ளார். பவ்ரல் அமைப்பின் பிரதிநிதிகளை சந்தித்த போதே அவர் இதனை குறிப்பிட்டுள்ளார்.

தற்போது நிலவும் காலநிலை தேர்தல் பணிகளுக்கு தடையாக இல்லை என்பதால், தேர்தல் பணிகள் தடையின்றி முன்னெடுக்கப்படுகின்றன எனவும் தேர்தல் ஆணையாளர் குறிப்பிட்டுள்ளார். உள்ளூராட்சி சபைத் தேர்தல் தொடர்பான அடுத்த கட்டப்பணிகள் சம்பந்தமாக பவ்ரல் அமைப்பினர் தேர்தல் ஆணையாளருடன் விரிவாகக் கலந்துரையாடினர். மழை மற்றும் வெள்ளம் தொடர்ந்தும் நீடிக்குமாயின அதனால் பாதிக்கப்படும் பிரதேசங்களை சேர்ந்த தெரிவத்தாட்சி அதிகாரிகளுடன் கலந்துரையாடி இறுதித் தீர்மானம் எடுககப்படும் எனத் தேர்தல் ஆணையாளர் தெரிவித்ததாக பவ்ரல் அமைப் பின் நிறைவேற்றுப் பணிப்பாளர் ரோஹண ஹெட்டியாராச்சி தெரிவித்தார்.



# இலக்கியங்களைப் படைப்பவர்கள் அவற்றில் முழுமனதுடன் செயற்பட்டால் வெற்றிபெற முடியும்



(யாழ்ப்பாணம்)

நாம் மேற்கொள்கின்ற செயற்பாடுகள் கடினமானவையாகவோ இலகுவானவையாகவோ இருக்கலாம். முழுமனதோடு அச்செயற்பாடுகளில் ஈடுபட்டால் வெற்றி பெறமுடியும் என மூத்த எழுத்தாளர் தெணியான் தெரிவித்தார்.

அண்மையில் அல்வாய் கலையகத்தில் நடைபெற்ற கலாமணி பரணீதரனின் மீண்டும் துளிர்ப்போம் சிறுகதைத் தொகுதி, இலக்கியமும் எதிர்காலமும் என்னும் கட்டுரைத் தொகுதி ஆகிய இருநூல்களின் வெளியீட்டுவிழாவில் தலைமை தாங்கி உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்தும் பேசுகையில், சஞ்சிகை வெளியீடு என்பது ஈழத்தைப் பொறுத்தவரையில் மிகவும் கடினமான காரியம். பெரும் ஆரவாரத்தோடு தொடங்கி இடைநடுவில் நின்றுபோன பல சஞ்சிகைகள் உள்ளன. ஆனால் ஜீவநதி தொடர்ந்தும் வெளிவருகின்றது என்றால் அதற்குப் பரணீதரனின் முழுமனதான ஈடுபாடுதான் காரணம்.

சிறுகதை என்பது உணர்ச்சி பற்றிப் பேசும் இலக்கிய வடிவம். கட்டுரை அறிவு பற்றிப் பேசும் இலக்கிய வடிவம். இதில் ஒருதுறையில் மட்டும் நிற்பவர் மற்றத்துறையில் ஈடுபடுவது சிரமமான விடயம். ஆனால் கலாமணி பரணீதரன் இந்த இருவடிவங்களையும் திறமையாகக் கையாண்டுள்ளார் என்பதை இவ்விரு நூல்களும் எடுத்துரைக்கின்றன என அவர் தெரிவித்தார்.

இந்நிகழ்வில் ஆய்வுரை நிகழ்த்திய ஆசிரியர் என்.விஜயசுந்தரம் உரையாற்றுகையில்-

ஒரு நூலை வாசிப்பவர் அந்நூலை இன்னும் பல தடவை வாசிக்க வேண்டும் என்று சிந்திப்பாரானால் அதுதான் சிறந்த இலக்கியம். சமூகத்திற் பற்றுள்ளவர்கள்தான் சிறந்த ஆக்க இலக்கியங்களைத் தரமுடியும். அத்தகைய இலக்கியங்களால்தான் சமூகத்திற்கு நன்மை கிடைக்கும்.

இன்று யாழ்ப்பாணத்தில் இருக்கக்கூடிய முக்கிய பிரச்சினைகள் பேசுபவர்கள் நீண்ட நேரம் பேசிக்கொண்டிருப்பதும், எழுதுபவர்கள் தேவைக் கதிகமாக எழுதிக்கொண்டிருப்பதும்தான்.

இன்றைய சமூகத்திற் பல மாற்றங்கள் எம்கண்முன்னாலேயே ஏற்படத் தொடங்கிவிட்டன. இதில் வாசிப்புப் பழக்கம மிகவும் குறைந்து கொண்டு வருகின்றது. சிறுவர் இலக்கியங்கள் எப்போது குறைந்ததோ அன்றிலிருந்து வாசிப்புப் பழக்கமும் குறைந்துவிட்டது. எனவே இலக்கியப்படைப்பாளிகள் சிறுவர் இலக்கியங்களையும் எழுத வேண்டும் என அவா தெரிவித்தார்.

இந்நிகழ்வில் யாழ்.கல்வியியற் கல்லூரி விரிவுரையாளர்களான ப.தனபாலன், கே.ஆர்.கே.கமலநாதன், பேராசிரியர் எஸ்.சிவலிங்கராஜா, யாழ்.பல்கலைக்கழக சமூகவியல்துறை விரிவுரையாளர் இ.இராஜேஸ்கண்ணா ஆகியோர் கலந்துகொண்டனர். (44)

## ஏகாதசி விரதபூசை

(அளவெட்டி)

நாகேஸ்வரம், அளவெட்டி மேற்கு -நாகவரத நாராயணர் தேவஸ்தானத்தில் எதிர்வரும் 14ஆம் திகதி திங்கட்கிழமை ஏகாதசி விரதபூசை மிகவும் சிறப்பாக நடைபெறவுள்ளது.

காலை 8 மணிக்குப் பூசைகள், விசேட அபிஷேகம், ஆராதனையுடன் தொடங்கும். 9 மணிக்கு விசேட சமய சொற்பொழிவு நிகழும்.

முற்பகல் 10 மணிக்கு வசந்த மண்டபப் பூசையைத் தொடர்நது -ஸ்ரீநாகவரத நாராயணர் தேவியர் சகிதம் வீதியுலா எழுந்தருள்வார்.

மதியம் 12 மணிக்கு அடியவாகளுக்கான மாகேஸ்வர பூசையும் நடைபெறும். (68)

## யாழ்.கோட்டைப் பகுதியைப் பார்வையிட நேர வரையறை

(அரியாலை)

யாழ்.நகரின் மையப்பகுதியில் அமைந்துள்ள மிகப் பழைமைவாய்ந்த ஒல்லாந்தரால் கட்டப்பட்ட யாழ்ப்பாணம் கோடடையை தினமும் சுற்றிப்பார்ப்பதற்கு காலை 6 மணிமுதல் மாலை 6 மணிவரை அனுமதி வழங்கப்பட்டு வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

தென்னிலங்கையில் இருந்து தினமும் இங்கு வருகைதரும் சுற்றுலாப் பயணிகளும் வெளிநாட்டவர்களும் மற்றும் மாணவர்கள் உட்படப் பலரும் பெருமளவில் கோட்டையைப் பார்வையிட்டுச் செல்கின்றனர். (23)

## வெளிச்ச வீட்டை மீளவும் புனரமைக்குமாறு கோரிக்கை

(யாழ்.நிருபர்)

காரைநகர், கற்கோவளம் கடற்கரையில் அமைந்துள்ள வெளிச்சவீடு நீண்டகாலம் புனரமைக்கப்படாது காணப்படுகிறது.

போர்த்துக்கேயர் காலத்தில் இவ்விடத்தில் ஒரு வெளிச்ச வீடு அமைக்கப்பட்டிருந்ததாகவும், பின்னர் ஒல்லாந்தர், ஐரோப்பியர் காலத்தில் தற்போதுள்ள பெரிய வெளிச்ச வீடு அமைக்கப்பட்டதாகவும் கூறப்படுகிறது.

மிகப் பழைமை வாய்ந்த இவ்வெளிச்ச வீடு கடலில் தொழிலுக்குச் செல்லும் மீனவர்களுக்கும் மற்றும் மாலுமிகளுக்கும் கடந்த காலங்களில் கலங்கரை விளக்காகத் திகழ்ந்தது.

கசூரினா சுற்றுலா மையத்திற்கு வரும் சுற்றுலாப் பயணிகள் இந்த வெளிச்ச வீட்டையும் சென்று பார்வையிட்டு வருகின்றனர்.

மீனவத் தொழில், சுற்றுலாத் தொழில் என்பவற்றுக்கு உதவும் வகையில் அமைந்துள்ள இவ்வெளிச்ச வீட்டைப் புனரமைககுமாறு சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடம் மீனவர்கள் வேண்டுகோள் விடுக்கின்றனர். (10)



யாழ்.கொழும்புத்துறை இலந்தைக்குளம் வீதியில் அமைந்திருக்கும் மதகு சேதமுற்று ஒருவருடத்துக்கு மேலாகியும் திருத்தப்படாமல் இருப்பதைப் படத்தில் காணலாம். (52)

## வீதிகள் சமநிலையில் இல்லாததால் போக்குவரத்துச் செய்வதில் சிரமம்

(அச்சுவேலி)

வீதிப்புனரமைப்புத் திட்டத்தின் கீழ் அகலமாக்கிப் புனரமைப்புச் செய்யப்பட்ட யாழ்ப்பாணம்-பருத்தித்துறை வீதியின் சில பகுதிகள் வெகு குறுகிய காலத்திலேயே சேதமடைந்த நிலையில், சேதமடைந்த அப்பகுதிகள் மட்டும் மீண்டும் திருத்தியமைக்கப்பட்டு வரும் பணிகள் இடம்பெற்று வருவதைக் காணக்கூடியதாக உள்ளது.

வல்லைச் சந்திப் பகுதியில் இவ்வாறு புனரமைப்புச் செய்யப்பட்டு சேதமடைந்த பின்னர் மீண்டும் புனரமைக்கப்பட்ட வீதிப் பகுதிகள் முன்னர்போல் உயர்வடைந்தும் தாழ்வடைந்தும் காணப்படுகிறது.

வாகன ஓட்டுநர்கள் சமநிலையற்ற இவ்வீதிகளில் வாகனம் செலுத்துவதில் பெரும் சிரமங்களை எதிர்நோக்கி வருகின்றனர்.

இது சம்பந்தமாக உரிய அதிகாரிகள் வீதி அகலிப்பு வேலைகளில் ஈடுபட்டிருந்த நிறுவனங்களுடன் தொடர்புகொண்டு நடவடிக்கை எடுப்பார்களா? என்று பயணிகள் கேள்வி எழுப்புகின்றனர். (03)

## மரக்கறி விலை அதிகரிப்பைக் கட்டுப்படுத்த அதிகாரிகளைச் சந்திக்க அரச அதிபர் ஏற்பாடு



(கிளிநொச்சி)

வன்னியில் அதிகரித்து வரும் மரக்கறி விலைகளைக் கட்டுப்படுத்துவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருவதாக கிளிநொச்சி மாவட்ட செயலகம் அறிவித்துள்ளது.

மேட்டுநிலப் பயிர்ச்செய்கைக்கென ஒதுக்கப்பட்ட சில குளங்களின் கீழான பகுதிகளில் விவசாயிகள் தேவைக் கேற்றவாறு நெல்லு உற்பத்தியை மேற்கொண்டு வருவதனாலேயே மரக்கறி உற்பத்திகள் குறைவடைந்து மரக்கறிகளின் விலைகளும் அதிகரித்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதனைக் கட்டுப்படுத்தும் முகமாக முதற்கட்ட நடவடிக்கை பிரமந்தனாறு குளத்தின் கீழ் பகுதியில் விவசாயிகளால் தற்பொழுது மேற்கொள்ளப்பட்டு வரும் நெல்லு உற்பத்தியை தடைசெய்து மேட்டுநிலப் பயிர்ச் செய்கை மேற்கொள்ளப்படவுள்ளது.

இது தொடர்பான சந்திப்பொன்று எதிர்வரும் 14ஆம் திகதி நடைபெறவுள்ளது. இதில் விவசாயத் திணைக்களத் தலைவர்கள், கிராமமட்ட கமக்கார அமைப்புக்கள் உள்ள அனைவரையும் இதில் கலந்துகொள்ளுமாறு கிளிநொச்சி மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி ரூபாவதி கேதீஸ்வரன் தெரிவித்தார்.

இவ்வாண்டு இந்தக் குளத்தின் கீழ் மேற்கொள்ளப்பட்டு வரும் நெல்செய்கையைத் தடைசெய்து மரக்கறி உள்ளிட்ட சிறுதானியப் பயிர்ச்செய்கையை ஊக்குவித்து மாவட்டத்தின் தேவைக்கேற்ப விவசாய உற்பத்திகளை மேற்கொள்வதற்கான நடைமுறைகள் கையாளப்படும் எனவும் அவர் தெரிவித்தார். (28)

## "அபிக்ஞான சகுந்தலம்" நாடக ஆற்றுகை

(தும்பளை)

யாழ்.பல்கலைக்கழக நுண்கலைத்துறையில் நாடகமும் அரங்கியலும் பயிலும் மாணவர்களினால் தயாரிக்கப்பட்ட மகாகவி காளிதாசரின் 'அபிக்ஞான சகுந்தலம்' நாடக ஆற்றுகை கைலாசபதி கலையரங்கில் நாளையும் நாளை மறுதினமும் நடைபெறவுள்ளது.

இந்த இரு தினங்களும் முற்பகல் 10, 11.30, பிற்பகல் 3.30, 5 மணி ஆகிய நேரஅட்டவணைகளின் பிரகாரம் நடைபெறவுள்ளது.

இதற்கான நுழைவுச்சீட்டுக்களைப் பார்வையாளர்கள் பல்கலைக்கழக நுண்கலைத்துறையில் பயிலும் மாணவர்களிடமும், நாடக நுழைவாயிலிலும் பெற்றுக்கொள்ளலாம் என ஏற்பாட்டாளர்கள் அறிவித்துள்ளனர். (62)

## விளையாட்டுப்போட்டி

(தும்பளை)

பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரியின் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி நாளை சனிக்கிழமை பி.ப.2 மணிக்கு கல்லூரி அதிபர் என்.தெய்வேந்திரராசா தலைமையில் நடைபெறும். இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்.போதனா வைத்தியசாலையின் வைத்திய கலாநிதி எஸ்.கிருஷ்ணர் கலந்துகொள்வதுடன் மாணவர்களுக்கான பரிசில்களை திருமதி அனந்தசிலோசினி கிருஷ்ணர் வழங்கிக் கௌரவிப்பார். (62)

## சிறுவர்களின் சிகிச்சைக்கு உதவி

(அச்சுவேலி)

வலிகாமம் கிழக்கு, கோப்பாய் பிரதேச செயலர் பிரிவிற்குட்பட்ட கிராமசேவகர் பிரிவுகளில் வசிக்கும் குடும்பங்களில் உள்ள பதினெட்டு வயதிற்குக் குறைவான சிறுவர்களின் அத்தியாவசிய வைத்திய சிகிச்சைக்கு வேண்டிய உதவிகள் பெற்றுக்கொடுப்பதற்கான நடவடிக்கைகள் கோப்பாய் பிரதேச செயலகத்தினால் மேற்கொள்ளப்பட்டு வருவதனால் உதவி தேவைப்படும் பிள்ளைகளின் குடும்பத்தினர் பிரதேச செயலகத்துடன் தொடர்புகொள்ளுமாறு கேட்கப்படுகின்றனர்.

பதினெட்டு வயதிற்குக் குறைந்த இருதய சத்திர சிகிச்சைக்கு உட்படுத்தப்பட வேண்டியோர், சிறுநீரக சத்திரசிகிச்சை மேற் கொள்ள வேண்டியோர், புற்று நோயாளர்கள் ஆகியோரையே இவ்வாறு பிரதேச செயலகத்துடன் தொடர்புகொள்வதன் மூலம் சிகிச்சைக்கான உதவிகளைப் பெற்றுக்கொள்ளுமாறு கேட்கப்படுகின்றனர். (03)

# சிறந்த பயிற்சிகளை வழங்குவதன் மூலம் திறமையான மாணவர்களை உருவாக்கலாம்

## கோட்டக்கல்விப் பணிப்பாளர் தெரிவிப்பு

(யாழ்.நிருபர்)

தேசிய மட்ட விளையாட்டுப் போட்டிகளில் சாதனை படைக்கக்கூடிய வல்லமை எமது பிரதேசத்துப் பாடசாலை மாணவர்களிடம் உண்டு. அத்தகைய மாணவர்களை இனங்கண்டு பயிற்சி வழங்குவதற்கு ஆசிரியர்களுடன் பெற்றோரும் போதியளவு ஒத்துழைப்பினை வழங்க வேண்டும்.

இவ்வாறு சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரியின் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டியில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு உரைநிகழ்த்திய தெல்லிப்பழைக் கோட்டக் கல்விப் பணிப்பாளர் ச.கைலாசநாதன் குறிப்பிட்டார்.

கல்லூரி விளையாட்டு மைதானத்தில் அதிபர் வ.ஸ்ரீகாந்தன் தலைமையில் நேற்று முன்தினம் நடைபெற்ற இந்நிகழ்வில் பிரதம விருந்தினர் தொடர்ந்து பேசுகையில் -

சிறந்த விளையாட்டு வீரர்களை இன்று இந்த மைதானத்தில் காணக்கூடியதாக இருந்தது. புகழ்பெற்ற விளையாட்டு வீரர்களை உருவாக்கியது விக்ரோறியாக் கல்லூரி. இக் கல்லூரியிலிருந்து தேசிய விளையாட்டு வீரர்கள் உருவாக வேண்டும். தேசிய ரீதியில் சாதனை படைகக்கூடிய வீரர்களை இனங்கண்டு அவர்களுக்குத் தொடர்ச்சியாகச் சிறந்த பயிற்சிகளை வழங்க வேண்டும். இதற்கு ஆசிரியர்களுடன் பெற்றோரும் ஒத்துழைப்பு வழங்க வேண்டும்.

உதைபந்தாட்டம், கிரிக்கெட் போன்ற பெரு விளையாட்டுக்களில் இந்தப் பாடசாலை மாணவர்கள் கடந்த காலங்களில் பல்வேறு சாதனைகளை நிலைநாட்டியுள்ளனர். அத்தகைய சாதனைகள் எதிர்காலத்தில் மேலும் அதிகரிக்கப்படுவதோடு, ஏனைய விளையாட்டுக்களிலும் உருவாககப்படவேண்டும்.

இப்பாடசாலையின் அபிவிருத்திக்கு பழைய மாணவர்கள் தேவையான வளங்களை வழங்கி வருகின்றனர். திணைக்களமும் தேவையான உதவிகளை வழங்கி வருகிறது. போதியளவு ஆசிரிய வளமும் உள்ளது. இவற்றைப் பயன்படுத்தி இப்பிரதேசப் பிள்ளைகளுக்குச் சிறந்த கல்வியை வழங்க வேண்டும்.

நல்ல வளம் நிறைந்த இப் பாடசாலையில் இடைநிலை, உயர்நிலைகளில் கல்வி கற்பதற்குப் பெற்றோர் தமது பிள்ளைகளைக் கொண்டு வந்து சேர்க்க வேண்டும். இந்தப் பாடசாலையின் ஊடாகப் பல்கலைக்கழகம் செல்வதற்கு மாணவருக்கு வாய்ப்பினை ஏற்படுத்திக் கொடுகக வேண்டும்.

இங்கு இல்லங்கள் அழகாக அமைக்கப்பட்டிருந்தன. நல்ல ஒழுங்குமுறையில் விளையாட்டுப் போட்டி நடைபெற்றது. இடைவேளையின்போது மிகச்சிறந்த முறையில் உடற்பயிற்சிக் கண்காட்சி நடைபெற்றது. இதனை மாணவர்களுக்குப் பயிற்சி வழங்கிய ஆசிரியை தமிழ்த்தினப் போட்டியில் நடன நிகழ்வில் தேசிய மட்டத்தில் மாணவியை வெற்றியீட்டிச் சாதனை படைத்தவர், அவருக்கு எமது பாராட்டுக்கள்.

விளையாட்டுத்துறையிலும் மாணவர்கள் கோட்ட, வலய மற்றும் மாவட்ட மட்டப் போட்டிகளில் பங்குபற்றித் தேசிய மட்டத்தில் சாதனை படைக்க ஆசிரியர்களும் பெற்றோர்களும் ஒத்துழைத்து ஊக்குவிக்க வேண்டுமெனக் கேட்டுக்கொண்டார்.

சிறப்பு விருந்தினராகக் கலந்துகொண்ட சங்கானைக் கோட்டக்கல்விப் பணிப்பாளர் துரை எங்கரசும் உரையாற்றினார். பிரதம விருந்தினரின் பாரியார் திருமதி.பவானி கைலாச நாதன் வெற்றியீட்டிய மாண வர்களுக்குப் பரிசில்களை வழங்கினார். (10)



அண்மையில் நடைபெற்ற ஆசிரியர் பரணிதரனின் இருநூல் வெளியீட்டு விழாவில் நூலில் முதற்பிரதியைப் பேராசிரியர் எஸ்.சிவலிங்கராசாவிடமிருந்து வை.வேலாயுதம் பெற்றுக்கொள்வதையும் அருகில் நூலாசிரியர் நிற்பதையும் காணலாம்.

## முகப்பு விளக்கற்ற சைக்கிளில் பயணம் செய்வோர் மீது சோதனை

(அச்சுவேலி)

இரவு வேளைகளில் முகப்பு விளக்கு வெளிச்சம் அற்ற துவிச்சக்கர வண்டிகளில் பயணிக்கும் துவிச்சக்கர வண்டிப் பயணிகள் அச்சுவேலி மற்றும் ஆவரங்கால் பகுதிகளில் இராணுவத்தினரால் வழிமறிக்கப்பட்டுக் கடுமையான சோதனைகளுக்கு உள்ளாக்கப்பட்டு விசாரிக்கப்பட்டு வருவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

திருடர்களின் பிடியிலிருந்து பொதுமக்களைப் பாதுகாப்பதற்காக ரோந்து நடவடிக்கைகளில் ஈடுபட்டுவரும் இராணுவத்தினரே மேற்படி சந்தேகத்திற்கிடமான முறையில் முகப்பு விளக்கு வெளிச்சமற்ற சைக்கிள்களில் செல்வோரையும் மற்றும் சந்தேகத்திற்கு இடமான முறையில் நடமாடித் திரிவோரையும் திடீர்திடீரென வழிமறித்துச் சோதனை செய்து வருவதுடன், அவர்களின் பெயர் விபரங்களையும் பதிவுசெய்து வருகின்றனர்.

இதேவேளை கிராமங்களினுள் இரவுவேளையில் பயணிக்கும் வாகனங்களும் வழிமறித்துச் சோதனைக்குள்ளாக்கப்படுவதும் குறிப்பிடத்தக்கது.(03)

## சிறுத்தீவில் மிதிவெடிகள் அகற்றப்பட்டு வருகின்றன

(யாழ்ப்பாணம்)

யாழ் சிறுத்தீவுப்பகுதியில் யுத்தகாலத்தின் போது புதைக்கப்பட்டிருந்த மிதிவெடிகள் மற்றும் வெடிபொருட்கள் கலோரஸ்ட் மனித நேயக்கண்ணிவெடியகற்றும் பிரிவினரினால் அகற்றப்பட்டு வருகின்றன.

கடந்த சில நாட்களாக மேற்படி நிறுவனத்தினரினால் இவ் வெடிபொருட்கள் அகற்றப்பட்டு வருவதாகத் தெரியவருகின்றது.

யுத்தகாலத்தின் போது இப்பகுதிகளில் மேற்கொள்ளப்பட்ட படை நடவடிக்கைகளின் போது வெடிபொருட்கள் புதைக்கப்பட்டிருந்தன. யுத்தம் நிறைவடைந்ததன் பின்னர் இவை அகற்றப்பட்டு அப்பிரதேசத்தில் யாழ்ப்பாண பிரதேச சபையின் அபிவிருத்தி வேலைத்திட்டங்கள் மேற்கொள்ளப்படவுள்ளதாகவும் அறிய வருகின்றது. (பா)

## ஆதினியின் இன்றைய பலன்

(11.02.2011 – வெள்ளிக்கிழமை)

### பஞ்சாங்கக் குறிப்புக்கள்

விகிர்தி தை 28

இராகுகாலம் 11.04– 12.34, சுபநேரம் 6.34 – 8.04, அட்டமி முன்இரவு 9.51, பரணி காலை 6.53 சித்தம், அட்டமி நவமி, கார்திகை விரதம்.

இரகுநாதையர் பஞ்சாங்க கணிப்பை அடிப்படையாகக் கொண்டது

மேடம்:– தொழிலால் வருமானம், பொருள் வரவு, நண்பர் உதவி.

ரிஷபம்:– சுகமான சிந்தனைகள், பாராட்டு, முயற்சி பலிதம்.

மிதுனம் :– ஆரோக்கிய விருத்தி, விருந்துணவு, கௌரவிக்கப்படல்.

கடகம்:– பரிசுகள் பெறல், இலாபம் அதிகரித்தல், கற்பனை மிகுதி.

சிம்மம்:– அதிக செலவு, திருடர் பயம், நண்பர் பகை.

கன்னி :– பொருள் இழப்பு, காரியத் தாமதம், முயற்சிக்கேற்ற லாபமின்மை.

துலாம் :– காரியத்தடை, வீண்பழிகேட்டல், மனக்குழப்பம்.

விருச்சிகம்:– திருடர் பயம், வாக்கு வாதம், காரியத்தடை.

தனுசு:– காரிய சித்தி, மேலாளர் நட்பு. பெரியோர் உதவி.

மகரம்:– மனக்குழப்பம், காரியத் தடை, அவமானப்படல்.

கும்பம் :– மருத்துவச் செலவு, நோய அதிகரித்தல், வீணான கற்பனை.

மீனம்:– உதவி செய்தல், பாராட்டுப் பெறுதல், எதிர்ப்பாலார் உதவி.

## வீதி வேலைத் தொழிலாளிகள் தங்குவதற்கு விடுதி அமைப்பு

(யாழ்.நிருபர்)

வீதி அபிவிருத்தி அதிகார சபையினரால் மேற்கொள்ளப்பட்டுவரும் வீதி வேலைத் தொழிலாளர்கள் தங்குமிடம் கோட்டைக்கண்மையில் அமைக்கப்பட்டு வருகிறது.

யாழ். நகரப்பகுதியில் குறிப்பாக யாழ். கோட்டையின் தென புற வீதி மற்றும் பண்ணை வீதியில் மேற்கொள்ள இருக்கும் மற்றும் மேற்கொள்ளப்பட்டு வரும் வேலைகளில் ஈடுபடும் தொழிலாளர் தங்கி நின்று தொழில் புரிவதற்கான தற்காலிக விடுதி ஒன்று கோட்டையின் தென்புறமாக பண்ணைக்குச் செல்லும் வீதிக்கரையை அடுத்து அமைக்கப்பட்டு வருகிறது.

துரையப்பா விளையாட்டு அரங்கில் இருந்து பண்ணைப் பாலத்துக்கப்பால் ஒரு கிலோ மீற்றர் வரையான பாதை நவீன முறையில் சீரமைக்கப்பட உள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

கடற்கரை வீதியை அடுத்த கடற்கரைப் பகுதி கனரக வாகனங்களால் மட்டுப்படுத்தப்பட்டு கறுப்பு நிறக் கலவை போட்டு அழுத்திச் செப்பனிடப்பட்டு தறபொழுது குழாய்க் கம்பங்கள் பொருத்திக் கூரைக்குப் பீலித் தகரங்கள் பொருத்தப்பட்டு வருகின்றன.

மேலும் துரையப்பா அரங்கிலிருந்து செல்லும் இந்த வீதி நயினாதீவுக்கான பாதை எனவும் குறிப்பிடப்படுகிறது. (23)

## இருளில் மூழ்குகிறது றெக்கிளமேசன் வீதி

(குருநகர்)

இரவு நேரங்களில் தினமும் குருநகர் றெக்கிளமேசன் வீதிகளில் மின்குமிழ்கள் ஒளிர்வதில்லை எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மத்திய கிழக்கு வீதி, தண்ணீர்த்தாங்கி வீதி இவற்றிலிருந்து கிளைவிடும் குறுக்கு வீதிகளிலும் பொருத்தப்பட்டுள்ள மின்குமிழ்கள் ஒளிர்வதில்லை என மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

இருளில் மூழ்கி இருக்கும் வீதிகளால் அதிகாலைகளில் தொழிலுக்குச் செல்லும் கடற்தொழிலாளர்கள் கொண்டு செலலும் மரக்கோல் குத்திப் பலர்காயங்களுக்கு உள்ளாகி வருவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

முன்னர் பொருத்தப்பட்ட மின்குமிழ்கள் சில தினங்களில் செயலிழந்து விட்டதாகவும், அதனைத் தொடர்ந்து குருநகர், றெக்கிளமேசன் வீதி பிரதேசம் இருளில் மூழ்கியே காணப்படுவதாகவும் கவலை தெரிவிக்கப்படுகிறது. (68)

## மெய்வல்லுநர் போட்டி

(அச்சுவேலி)

யாழ். நவக்கிரிஅமெரிக்கமிஷன் தமிழ் கலவன் பாடசாலையின் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி நாளை சனிக்கிழமை பிற்பகல் 1.30 மணிககு அதிபர் திரு.த.இராதாகிருஷ்ணமூர்த்தி தலைமையில் பாடசாலை மைதானத்தில் நடைபெறவுள்ளது.

இப் போட்டிகளில் பிரதம விருந்தினராக கோப்பாய் கோட்டக்கல்விப்பணிப்பாளர் திரு.வே.பாலசுப்பிரமணியமும், சிறப்பு விருந்தினராக ஓய்வு பெற்ற அதிபர் திரு.காசி பகவத்சிங்கும் கௌரவ விருந்தினர்களாக நவிற்கிரி பிரதேச கிராம சேவகர் திரு.சி. எழிலரசன், நவற்கிரி பிரதேச சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர் திரு.எஸ்.பிறேமதாஸ் மற்றும் லயன் ஆ.நடராசா ஆகியோரும் கலந்து கொண்டு சிறப்பிக்கவுள்ளனர். (03)

❋❋❋

யாழ். புனித மரியாள் வித்தியாலயத்தின் (O.L.R) வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி நாளை சனிக்கிழமை காலை. 9.00 மணிக்கு வித்தியாலய அதிபர் திரு.மொறாய்ஸ் தலைமையில் துரையப்பா விளையாட்டரங்கில் இடம்பெறவுள்ளது.

இன்நிகழ்விற்கு பிரதம விருந்தினராக யாழ். மநாகர முதல்வர் திருமதி. யோகேஸ்வரி பற்குணராஜா கலந்து கொள்ளவுள்ளார். (52)


❋❋❋

(தெல்லிப்பழை)

தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரியின் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் திறனாய்வுப் போட்டி நாளை சனிக்கிழமை பிற்பகல் 1 மணிக்கு கல்லூரி மைதானத்தில் அதிபர் சிவமலர் ஆனந்தசயனன் தலைமையில் நடைபெறவுள்ளது.

வடமாகாண திறைசேரி பிரதி பிரதம செயலாளர் (நீதி) அழகரத்தினம் மனோரஞ்சன் (மகாஜனன்) பிரதம விருந்தினராகவும், யாழ். மாவட்ட கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் மகிந்த ஹத்துருசிங்க கௌரவ விருந்தினராகவும், தெல்லிப்பழைக் கோட்டக் கல்விப் பணிப்பாளர் எஸ்.கைலாசநாதன் சிறப்பு விருந்தினராகவும் கலந்து கொள்ளவுள்ளனர். (44)

# புலிகளின் செயற்பாட்டுத் தளமாக பிரிட்டன்; அனுமதிக்கக் கூடாது என்கிறார் சம்பிக்க



(கொழும்பு)

புலிகள் பிரித்தானியாவைக் களமாகப் பயன்படுத்தி நடவடிக்கை மேற்கொள்ள சந்தர்ப்பம் அளிக்கப்படக் கூடாது என மின்வலு எரிசக்தி அமைச்சர் பாட்டாலி சம்பிக்க ரணவக்க தெரிவித்தார்.

இலங்கைக்கு எதிரான நடவடிக்கைகளில் ஈடுபடுவதற்கு புலிகளுக்குச் சந்தர்ப்பம் அளிக்கக் கூடாது எனப் பிரித்தானிய பிரதமர் டேவிட் கமரூனிடம், சம்பிக்க கோரிக்கை விடுத்துள்ளார்.

அவசரகாலச் சட்ட நீடிப்பு தொடர்பான நாடாளுமன்ற விவாதத்தில் கலந்து கொண்டு உரையாற்றிய போது அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

இஸ்லாமிய கடும்போக்கு வாதம் போதிக்கப்படக் கூடாது என அண்மையில் டேவிட் கமரூன் தெரிவித்திருந்ததாகவும், இந்த நிலைப்பாடு புலிகள் தொடர்பிலும் அமுல்படுத்த வேண்டும் எனவும் அவர் கோரிக்கை விடுத்துள்ளார்.

அவ்வாறு நடவடிக்கை எடுக்காத பட்சத்தில் பிரித்தானிய காலனித்துவ ஆட்சியின் போது மேற்கொள்ளப்பட்ட அடக்குமுறைகள் தொடர்பாகக் கருத நேரிடும் என அவர் தெரிவித்துள்ளார்.

தமிழக அரசியல்வாதிகள் புலிகளுக்கு ஆதரவாகச் செயற்பட்டு பிராந்தியத்தில் அமைதியின்மையை ஏற்படுத்த வேண்டாம் என அவர் வலியுறுத்தியுள்ளார்.

உருத்ரகுமாரன், நெடியவன் மற்றும் விநாயகம் போன்ற புலி ஆதரவாளர்கள் நாட்டின் ஸ்திரத்தன்மைக்குக் குந்தகம் ஏற்படுத்த முயற்சிப்பதாக அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

ஊடகங்கள் தார்மீகப் பொறுபபுடன் செயற்பட வேண்டியது அவசியமானது என அவர் தெரிவித்துள்ளார். விமர்சனங்களுக்கு மட்டும் வரையறுக்கப்பட்ட ஊடக சுதந்திரத்தை ஏற்றுக்கொள்ள முடியாது என அவர் குறிப்பிட்டுள்ளார்.

# புத்தரை வணங்கும் பாம்பு



(கொழும்பு)

குருணாகல் மாவட்டத்தின் கல்கமுவ பிரதேசத்தில் உள்ள விகாரை ஒன்றில் நேற்றுமுன்தினம் முதல் புத்தர் சிலைகளை நாகபாம்பு ஒன்று வழிபட்டு வருகிறதாம். புத்தர் சிலைகளின் மேல் தனது உடலை வளைத்து நிற்கும் இந்த நாகபாம்பு அருகில் சென்ற எவருக்கும் எவ்வித தீங்கும் ஏற்படுத்தவில்லை எனத் தெரிவிக்கப்படுகிறது.

புத்தரின் அருளாசியை நாடி இந்நாக பாம்பு வந்து உள்ளது என்கின்றனர் பிக்குமார்.

இத்திடீர் அதிசயத்தைக் காண ஏராளமான மக்கள் இவ் விகாரைக்குச் சென்ற வண்ணம் உள்ளார்கள்.

புத்த பகவானை விஷ்ணுவின் ஒரு அவதாரம் என்று புத்த சமயிகள் நம்புகின்றனர். பாம்பின் மேல் பள்ளி கொள்பவர் விஷ்ணு என்கின்றன புராண இதிகாசங்கள் என்பதும் குறிப்பிடத்தக்கது.

# பிரித்தானிய இராணுவச் சட்டத்தின்படியே பொன்சேகாவிற்கான சிறைத்தண்டனை



(கொழும்பு)

பிரித்தானிய ஆட்சியதிகாரத்திலிருந்து விடுபட்டு விட்ட நாம் 78 இல் இயற்றப்பட்ட அரசியலமைப்பையே பின்பற்றி வருகின்றோம். இந்நிலையில் 1881 இல் இயற்றப்பட்ட பிரித்தானிய இராணுவச் சட்டத்தின் கீழேயே சரத்பொன்சேகா தண்டனை அனுபவிக்கின்றார்.

பிரித்தானிய சட்டம் மீண்டும் இங்கு அமுல்படுத்தப்படுவதற்கு இடமளிக்க முடியாது என்று எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க நேற்று முன்தினம் நாடாளுமன்றில் ஊடகங்கள் ' மீதும் அமைதி வழி ஆர்ப்பாட்டங்கள் மீதும் தாக்குதல்கள் நடத்தப்படுகின்றன. ஆனால் குற்றவாளிகள் கைது செய்யப்படுவதும் இல்லை. பொலிஸார் விசாரணைகளை நடத்துவதுமில்லை. இத்தகைய செயற்பாடானது நாட்டில் சர்வாதிகார ஆட்சியே இடம்பெறுகின்றது என்பதை உணர்த்தி நிற்கின்றது என்றும் அவர் கூறினார். நாடாளுமன்றத் தில் கடந்த செவ்வாய்க்கிழமை நடைபெற்ற அவசரகாலச் சட்டம் மீதான விவாதத்தில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

# இயற்கை அனர்த்தம் தொடர்பாக நீண்டகாலத் திட்டங்கள் தேவை

## ஜனாதிபதி தெரிவிப்பு

(கொழும்பு)

இயற்கை அனர்த்தங்களுக்கு முகம்கொடுக்கும் வகையில் தற்காலிக தீர்வுகள் அன்றி நீண்ட கால திட்டங்களை வகுக்க வேண்டும் என ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார். உலகம் தற்போது எதிர்நோக்கும் இயற்கை அனர்த தங்களும் காரணம் எதிர் விளைவுகளை கருத்தில் கொள்ளாது மேற்கொள்ளப்படும் சூழல் பாதிப்புக்களே என ஜனாதிபதி சுட்டிக்காட்டியுள்ளார். நுவரெலியா மாவட்ட அனர்த்த முகாமைத்துவ குழுவை அலரி மாளிகையில் நேற்று முன்தினம் சந்தித்துக் கலந்துரையாடிய போதே அவர் இந்த கருத்துக்களை வெளியிட்டார்.

உள்ளூராட்சி சபைகளினால் உரியவகையில் சுற்றாடல் தொடர்பான சட்டதிட்டங்களை நடைமுறைப்படுத்தாமையானது விசேடமாக மலையக பிரதேசங்களில் அனர்த்த நிலைமைகளுக்கு நேரடியாக தாக்கம் செலுத்தியுள்ளதாக அவர் குறிப்பிட்டார். சட்டவிரோத கட்டிடங்கள் மற்றும் அனுமதியற்ற விளைநிலங்களுக்குக் காணிகளை வழங்குதல் மூலமும் நாடு அனர்த்த நிலைக்கு முகம்கொடுத்துள்ளது. இதேவேளை, 17 மாவட்டங்களில் ஏற்பட்டுள்ள அசாதாரண காலநிலை காரணமாக இதுவரை ஒரு லட்சத்து 81,222 பேர் தொடர்ந்தும் தற்காலிக முகாம்களிலேயே தங்கியுள்ளனர். வெள்ளப்பெருக்கு



மற்றும் மண்சரிவுகள் காரணமாக 3 லட்சத்து 18,779 க்கும் அதிகமான குடும்பங்களைச் சேர்ந்த 11 லட்சத்து 85,558 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர். இயற்கை அனர்த்தங்களில் 14 பேர் வரை பலியாகினர்.

# பொது ஆங்கில பாடச் சித்தியை மாணவர்கள் பெறுவது கட்டாயம்



(கொழும்பு)


எதிர்வரும் நாட்களில் பல்கலைக்கழக அனுமதியை மாணவர்கள் பெறுகின்றமைக்கு கல்வி பொதுதராதர உயர்தர பரீட்சையில் பொது ஆங்கிலம் என்கிற பாடத்தில் சித்தி பெற வேண்டியமை கட்டாயமென தீர்மானம் நிறைவேற்றி உள்ளது உயர் கல்வி அமைச்சு.

உயர்தர மாணவர்கள் "பொது ஆங்கிலம்" பாடப் பரீட்சைக்குக் 'கட்டாயம் தவறாது தோற்றியே ஆக வேண்டும் என்றும் இல்லாவிட்டால் "பல்கலைக்கழக அனுமதியை பெறுகின்றமைக்கு அருகதை அற்றவர்கள் என்றும் உயர்கல்வி அமைச்சர் எஸ்.பி திசாநாயக்க அறிவித்துள்ளார்.

மாணவர்கள் பொது ஆங்கில பாடப் பரீட்சையில் பெறுகின்ற புள்ளிகளின் அடிப்படையில் வகைப்படுத்தப்படுவார்கள் என்று உயர்கல்வி அமைச்சின் செயலாளர் சுனில் ஜயந்த நவரட்ண தெரிவித்துள்ளார்.

ஆங்கில பாட ஆசிரியர்கள் இல்லாத பாடசாலைகளை சேர்ந்த மாணவர்களும் கட்டாயம் இப்பரீட்சைக்கு தோற்றியே ஆக வேண்டும் என்றும் பரீட்சை விடைத்தாள்களில் ஆங்கில பாட ஆசிரியர்கள் இல்லாத பாடசாலையைச் சேர்ந்தவர்கள் என்பதை விசேடமாக குறிப்பிட்டுக் காட்ட முடியும் என்றும் அமைச்சு தெரிவித்துள்ளது.

# ஐ.தே.கட்சி இனவாதமாகச் செயற்படுவதாக குற்றச்சாட்டு



ஐக்கிய தேசியக் கட்சியானது இனவாதமாகநடந்து கொள்வதாக ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் நாடாளுமன்ற உறுப்பினர்கள் சிலர் பகிரங்கமாகக் குற்றம் சாட்டியுள்ளனர்.

ஐக்கிய தேசியக் கட்சியுடன் இணைந்து போட்டியிட்டு நாடாளுமன்றத்திற்குத் தெரிவான ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் தற்போது அரசாங்கத் தரப்பில் இணைந்து கொண்டுள்ளனர்.

அதன் காரணமாக அவர்களின் பதவிகளைப் பறிக்கப்போவதாக கடந்த மூன்றாம் திகதி ஐக்கிய தேசியக் கட்சியின் பொதுச் செயலாளர் திஸ்ஸ அத்தநாயக்க ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு கடிதம் மூலம் அறிவித்திருந்தார். ஆயினும் தாம் எந்த நேரத்திலும் சுயமாகச் செயற்படக் கூடியதாக புரிந்துணர்வு ஒப்பந்தம் ஒன்றின் மூலமே ஐக்கிய தேசியக்கட்சியுடன் இணைந்து போட்டியிட்டு நாடாளுமன்றம் தெரிவாகியுள்ளதால் தம்மீது அக்கட்சி எந்தவிதமான சட்ட நடவடிக்கையும் எடுக்க முடியாது என்று அவர்கள் தெரிவிக்கின்றனர். தவிரவும் தனது கட்சி உறுப்பினர்களுக்கு எதிராக எதுவுமே செய்யத் திராணியற்ற ஐ.தே.க முஸ்லிம் காங்கிரஸ் உறுப்பினர்களுக்கு மட்டும் எச்சரிக்கை விடுப்பது அதன் இனவாதப போக்குக்கு எடுத்துக்காட்டாக இருப்பதாகவும் அவர்கள் குறிப்பிடுகின்றனர்.

தவிரவும் ஐக்கிய தேசியக் கட்சிப் பொதுச் செயலாளரின் கடிதத்துக்கு எதிராகத் தாம் நீதிமன்றத்தை நாடப்போவதாகவும் அவர்கள் தெரிவித்துள்ளனர்.

# ஐவர் கைது

(கொழும்பு)

இலங்கைப் பெண்களை அடிமைகளாக நடத்திக் கொடுமைப்படுத்தினர் என்கிற குற்றச்சாட்டின் பேரில் அமெரிக்காவின் டெக்சாஸ் மாநிலத்தில் உள்ள Dallas நகரத்தில் ஐவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இச்சந்தேக நபர்களில் இருவர் கணவன் - மனைவி ஆவர்.

இருவரும் அமெரிக்கர்கள். அதேநேரம் ஜோர்தானிய பிரஜாவுரிமையும் உடையவர்கள்.

இவர்கள் குற்றவியல் நீதிமன்றம் ஒன்றில் ஆஜராக்கப்பட்டனர். ஆட்களை அடிமைகளாக நடத்திக் கொடுமைப்படுத்துகின்றமை அமெரிக்காவில் ஆட்கடத்தலுக்கு இணையான குற்றம் ஆகும்.

குற்றவாளிகளாக காணப்படுபவர்களுக்கு ஆகக் கூடுதலாக இருபது வருட கடூழிய சிறை மற்றும் 250,000 அமெரிக்க டொலர் அபராதம் ஆகியன விதிக்கப்படும் என்று அமெரிக்க நீதி அமைச்சு அறிவித்து உள்ளது.

# பீரிஸின் செலவு 6.5 மில்லியன் ரூபா



(கொழும்பு)


வெளிவிவகார அமைச்சர் ஜீ.எல்.பீரிஸின் வெளிநாட்டு விஜயங்களுக்காக 6.5 மில்லியன் ரூபா இதுவரையில் செலவிடப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

2010ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 25ஆம் திகதி பதவிப் பிரமாணம் செய்து கொண்டது முதல் இதுவரையில் 13 வெளிநாட்டு விஜயங்களை அமைச்சர் மேற்கொண்டுள்ளார்.

ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் ரவி கருணாநாயக்க எழுப்பிய கேள்விக்குப் பதிலளித்தபோது அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

பூட்டான், சீனா, அமெரிக்கா, ஜப்பான், பிரித்தானியா, ஈரான், உக்ரேய்ன் மற்றும் மாலைதீவு போன்ற நாடுகளுக்கு அமைச்சரும், அவரது உத்தியோகத்தர்களும் விஜயம் செய்துள்ளனர்.

# மேசைப்பந்தாட்ட போட்டித் தொடரில் யூனியன், ஸ்கந்தா வலய மட்டத்திற்கு



(யாழ்ப்பாணம்)

வலிகாமம் கல்வி வலய மேசைப்பந்தாட்டப் போட்டித் தொடரில் தெல்லிப்பளை யூனியன் கல்லூரி மற்றும் ஸ்கந்தா ஆகிய அணிகள் முதல் இரு இடங்களைப் பெற்று வலய மட்டப் போட்டிக்குத் தெரிவாகின.

இப்போட்டி கடந்த ஆறாம் திகதி சுன்னாகம் ஸ்கந்தவரோதயக் கல்லூரி மைதானத்தில் நடைபெற்றது.

வலிகாமம் கல்வி வலயத்திற்குட்பட்ட பாடசாலை அணிகள் பங்கு கொண்ட இந்தப் போட்டித் தொடரின் அரையிறுதிப் போட்டிகளில், அராலி சரஸ்வதி வித்தியாலயத்தை தெல்லிப்பளை யூனியன் கல்லூரி அணியும், அளவெட்டி அருணோதயக் கல்லூரி அணியை ஸ்கந்தவரோதயக் கல்லூரி அணியும் வெற்றிபெற்று இறுதிப் போட்டிக்குத் தெரிவாகின. இறுதிப் போட்டியில் ஸ்கந்தவரோதயக் கல்லூரி அணியை எதிர்கொண்ட தெல்லிப்பளை யூனியன் கல்லூரி அணி வெற்றி பெற்று வலய மட்டச் சம்பியனாகத் தெரிவாகியது. (44)

## இன்றைய ஆட்டங்கள்

(யாழ்ப்பாணம்)

யாழ். சென் ஜோன்ஸ் மற்றும் சென் பற்றிக்ஸ் கல்லூரி அணிகளின் 19 வயதுப் பிரிவினருக்கான இரண்டு நாட்களைக் கொண்ட சிநேகபூர்வ கிரிக்கெட் போட்டி இன்று சென் ஜோன்ஸ் விளையாட்டு மைதானத்தில் ஆரம்பமாகின்றது. (எஸ்)

யாழ். மத்திய கல்லூரி மற்றும் கொக்குவில் இந்துக் கல்லூரி அணிகளின் 19 வயதுப் பிரிவினருக்கான இரண்டு நாட்களைக் கொண்ட இனிங்ஸ் போட்டி இன்று கொக்குவில் இந்துக் கல்லூரி மைதானத்தில் ஆரம்பமாகின்றது. இரு அணிகளுமே தற்போது பலமான நிலையில் உள்ளமையால் இப்போட்டி ரசிகர்களிடையே மிகுந்த எதிர்பார்ப்பை ஏற்படுத்தியுள்ளது. (எஸ்)

## இரண்டாவது முறையும் சிறந்த வீரராகத் தெரிவு



(மெல்போர்ன்)

அவுஸ்ரேலிய வீரர் வட்சன் தொடர்ந்து இரண்டாவது ஆண்டாக சிறந்த வீரர் விருதை தட்டிச் சென்றார்.

அவுஸ்ரேலியா கிரிக்கெட் சார்பில் ஒவ்வொரு ஆண்டும் விருதுகள் வழங்கப்படுகிறது. இதில் சிறந்த வீரருக்கான அலன்போர்டர் விருதை, 295 வாக்குகள் பெற்ற வட்சன், தொடர்ந்து இரண்டாவது ஆண்டாக தட்டிச் சென்றார். இரண்டாவதாக டேவிட் ஹசியும் (195 வாக்குகள்), மூன்றாவதாக மிட்சல் ஜான்சனும் (193) தேர்வு செய்யப்பட்டனர்.

## இங்கிலாந்து கழகத்துடன் ஒப்பந்தம்


(கொழும்பு)

இலங்கை அணியின் நட்சத்திர சுழல்பந்து வீச்சாளர் முத்தையா முரளிதரன் இங்கிலாந்தின் Gloucestershire கழகத்துடன் ஒப்பந்தம் ஒன்றை செய்துக் கொண்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதன்படி எதிர்வரும் 2 வருடங்களுக்கு முத்தையா முரளிதரன் Gloucestershireக்கு 20 - 20 போட்டிகளில் விளையாடவுள்ளார். டெஸ்ட் போட்டிகளில் 800 விக்கெட்களை எடுத்து சாதனை படைத்துள்ள முரளி இந்த உலகக் கிண்ண கிரிக்கெட் போட்டிகளுடன் ஓய்வுபெறவுள்ளதாக அறிவித்துள்ளார்.

இந்த நிலையில் அவுஸ்திரேலியா விடுத்துள்ள அழைப்பு தொடர்பில் பரிசீலித்துப் பார்க்கவுள்ளதாக முத்தையா முரளிதரன் குறிப்பிட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

## அனுபவம் குறைந்த அணிகளை குறைத்து மதிப்பிடவேண்டாமாம்



(கொழும்பு)

இலங்கை அணியானது உலகக்கிண்ண போட்டிகளின் காலிறுதிக்குச் சுற்றுக்கு தகுதி பெறவேண்டுமாயின் தமது குழுவில் இடம்பெற்றுள்ள அனுபவம் குறைந்த அணிகளைக் குறைத்து மதிப்பிடக்கூடாதென முத்தையா முரளிதரன் தெரிவித்தார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது: இம்முறை இலங்கை அணி “ஏ” குழுவில் இடம் பெற்றுள்ளது.

இக்குழுவில் அவுஸ்திரேலியா, நியூசிலாந்து, பாகிஸ்தான், சிம்பாப்வே, கடனா மற்றும் கென்ய அணிகள் இடம்பெற்றுள்ளன.

அவுஸ்திரேலியா, நியூசிலாந்து, பாகிஸ்தான், அணிகள் மற்றும் வீரர்கள் தொடர்பில் தாம் அறிந்துள்ள போதிலும் மற்றைய அணிகள் தொடர்பில் தனக்குத் தெரியாதெனவும் அவர்கள் எந்நேரமும் அதிர்ச்சியளிக்கலாம் எனவும் அவர் தெரிவித்தார்.

இது ஓய்வு பெறுவதற்கு முன்னர் தான் விளையாடும் இறுதி ஒருநாள் தொடர் என்ற போதிலும் எதுவித மேலதிக அழுத்தங்களையும் தான் உணரவில்லை. ஆசிய நாடுகளின் ஆடு களங்களின் தன்மையைப் புரிந்துள்ளமையால் அணிகளுக்கு ஏற்றவாறு சில திட்டமிடங்களைச் செய்து கொள்ளக்கூடிய வகையில் இருக்குமெனவும் அங்கு குறிப்பிட்டார்.




## அழுத்தத்தை எதிர்கொள்ளும் அணியே தெரிவானது என்கிறார் குமார் சங்கக்கார



(கொழும்பு)

நெருக்கடியான நேரத்தில் அழுத்தங்களுக்கு முகம் கொடுத்து ஆடும் வகையிலேயே இலங்கை அணி தேர்வு செய்யப்பட்டுள்ளதென இலங்கை அணித் தலைவர் குமார் சங்கக்கார குறிப்பிட்டுள்ளார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது:

உலகக் கிண்ண போட்டிக்கு முன்னர் அதற்கான தயார் நிலை ஆட்டத்தில் போதுமான அளவில் விளையாடி உள்ளோம். உலகக் கிண்ண போட்டிக்கு முன்னர் எமக்கு இன்னும் இரண்டு போட்டிகள் எஞ்சியுள்ளன.

அர்ஜுன ரணதுங்கவின் கருத்தை என்னால் புரிந்து கொள்ள முடியும். எனினும் நெருக்கடியான நேரத்தில் அழுத்தங்களுக்கு முகம் கொடுத்து ஆடும் வகையிலேயே இலங்கை அணி தேர்வு செய்யப்பட்டுள்ளது. அணித் தேர்வின் போது இந்த விடயம் முக்கியமாக கருத்தில் கொள்ளப்பட்டது.

சனத் ஜயசூரிய மற்றும் சமிந்த வாஸ் இல்லாமல் நாம் கடந்த காலங்களில் சிறப்பாகச் செயற்பட்டுள்ளோம். தற்போதைய அணி உலகக் கிண்ணத்திற்குப் பொருத்தமாக அமைந்துவிட்டது என்றார்.

## எல்லா அணிகளும் அபாயகரமானதே



(பெங்களூர்)


உலகக் கிண்ணப் போட்டியில் பங்கேற்கும் எல்லா அணிகளும் அபாயகரமானதே. ஒவ்வொரு அணிக்கும் அதன்பலம் தெரியும். பெரும்பாலான அணிகள் பந்து வீச்சில் பலம் பொருந்தியவையாக இருக்கும் என்று கருதுகிறேன் என இந்திய அணித் தலைவர் டோனி தெரிவித்தார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது:

டெஸ்ட் கிரிக்கெட்டுக்கும், 20 ஓவர் போட்டிக்கும் இடையே மாறுபட்டது 50 ஓவர் போட்டி. நான் ஒருநாள் போட்டியின் ரசிகன் ஆவேன். ஒருநாள் போட்டியை நேசிக்கிறேன். அதற்காக டெஸ்ட் அல்லது, 20 ஓவர் போட்டியை விரும்பவில்லை என்று அர்த்தம் கிடையாது.

பிரவீன்குமார் சிறந்த வீரர். நேர்த்தியுடன் பந்து வீசக் கூடியவர். அவர் காயத்தால் ஆட முடியாமல் போனது துரதிருஷ்டமே. அவரை நாங்கள் அதிகமாக இழந்து வருகிறோம். சில வீரர்கள் லேசான காயத்தில் இருக்கலாம். அது எப்போதும் நடக்க கூடியது தான். ஆனால் கவலைப்படும் படும்படி ஒன்றும் இல்லை. எந்த ஒரு வீரருக்கும் பயப்படும்படி பெரிய அளவிலான காயம் இல்லை என்றார்.

## சொகைல் தன்வீர் நீக்கம் ஜூனைத்கான் இணைப்பு



(கராச்சி)

15 பேர் கொண்ட பாகிஸ்தான் அணியிலிருந்து வேகப்பந்து வீரரான சொகைல் தன்வீர் முழங்காலில் ஏற்பட்ட காயம் காரணமாக நீக்கப்பட்டுள்ளார். இந்தக் காயம் இதுவரை முழுமையாகக் குணமடையவில்லையென பாகிஸ்தான் கிரிக்கெட் சபை தெரிவித்துள்ளது.

சொகைல் தன்வீருக்கு பதிலாக புதுமுக வீரர் ஜுனைத்கான் அணியில் சேர்க்கப்பட்டுள்ளதாகவும் அது மேலும் தெரிவித்தது. 21 வயதான ஜுனைத்கான் 35 முதல் தர போட்டியில் 167 விக்கெட்டுக்களைக் கைப்பற்றியுள்ளார்.

உலகக் கிண்ணப் போட்டித் தொடரில் விளையாட வாய்ப்புக் கிடைத்தமை மகிழ்ச்சியளிப்பதாகவும், சிறப்பான முறையில் செயற்படுவேன் என்றும் ஜுனைத்கான் தெரிவித்தார்.

## உலகக் கிண்ணத் தொடருக்கு நம்பிக்கை அளித்த வெற்றி!

(கராச்சி)

நியூசிலாந்து அணிக்கு எதிரான ஒரு நாள் தொடரில் பெற்ற வெற்றி, உலகக் கிண்ணத் தொடரில் நம்பிக்கை யுடன் செயற்பட உதவும் என, பாகிஸ்தான் அணியின் தலைவர் அப்ரிடி தெரிவித்தார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது:

பொதுவாக ஒருசில வீரர்களின் செயற்பாட்டை மட்டும் வைத்துக் கொண்டு, தொடரை வெல்வது என்பதை நினைத்துப் பார்க்க முடியாது. சமீபத்தில் பல தொடர்களில் சிறப்பாக செயற்பட்ட போதும், தொடரை வெல்ல முடியவில்லை. இதனால் இம்முறை நியூசிலாந்துக்கு எதிரான தொடரில், ஒருங்கிணைந்து திறமையை வெளிப்படுத்தினோம். இதனால் தான் வலிமையான நியூசிலாந்து அணியை, அதன் சொந்த



மண்ணில் வீழ்த்த முடிந்தது. இதை அவ்வளவு எளிதில் மறக்க முடியாது. இந்த வெற்றியில் ஒவ்வொரு வீரரின் பங்கும் உள்ளது. உலகக்கிண்ணத் தொடர் ஆரம்பமாகவுள்ள இந்நேரத்தில் கிடைத்த வெற்றி, அத்தொடரில் நம்பிக்கையுடன் செயற்பட உதவும். ஆசிய மண்ணில் போட்டிகள் நடப்பது, எங்களுக்கு மட்டுமல்ல, ஆசிய அணிகளுக்கும் சாதகமானது. பாகிஸ்தான் மக்களும் எங்களுக்காக இறைவனிடம் பிரார்த்தனை செய்யவேண்டும் என்றார்.

# வழிமுறைகள் தோற்றதன் காரணமாகவே இணக்க அரசியலுக்குள் கூட்டமைப்பினர்

## அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா நாடாளுமன்றில் பேச்சு



கடந்த 08.02.11 இல் அவசரகால சட்ட நீடிப்பு விவாதத்தில் கலந்து கொண்டு ஈழமக்கள் ஜனநாயக கட்சியின் செயலாளர் நாயகமும் அமைச்சருமான கௌரவ டக்ளஸ் தேவானந்தா அவர்கள் நாடாளுமன்றத்தில் ஆற்றிய உரை!

அவசரகால சட்ட விவாதத்தில் கலந்து கொள்ளும் நான் காலத்தின் தேவையை உணர்ந்து காத்திரமான சில உண்மைகளை இந்தச் சபையில் தெரிவிக்க வேண்டிய கட்டாயத்தில் இருக்கின்றேன்.

இந்த நாட்டின் பாதுகாப்பு என்பது இந்த நாட்டில் வாழுகின்ற ஒவ்வொரு பிரஜையினதும் பாதுகாப்பையும் அடிப்படையாகக் கொண்டதேயாகும்.

இந்த நாட்டில் வாழும் அனைத்து குடிமக்களினதும் இயல்பு வாழ்க்கைச் சுதந்திரத்திற்கும் பாதுகாப்பிற்கும் இந்த நாட்டின் இறைமைக்கும் எதிராக கிளப்பப்படுகின்ற அனைத்து தடைகளையும் எதிர்கொண்டு எமது நாட்டையும் மக்களையும் பாதுகாப்பதற்காகவே இந்த அவசரகாலச்சட்டம் பெரிதும் பங்காற்ற வேண்டும் என்பதே சகலரதும் விருப்பமாகும்.

யுத்தம் இங்கு நடந்து முடிந்திருக்கின்றது. ஆனாலும், எமது மக்களின் இயல்பு வாழ்க்கைச் சுதந்திரம் பாதிக்கும் படியாக சிறு சிறு வன்முறைச் சம்பவங்கள் அவ்வப்போது யாழ் குடாநாட்டில் நடந்து வருவதை நீங்கள் அறிவீர்கள்.

இந்த விடயத்தை கடந்த தை மாதம் 4 ஆம் திகதி இந்த உயரிய சபையின் கவனத்தை ஈர்ப்பதற்காகவும், சுயலாப அரசியல் சக்திகள் இந்த நாடாளுமன்றத்தை தவறாக வழிநடத்தி விடக்கூடாது என்பதற்காகவும் எனது பார்வையில் எமது மக்களின் எதிர்பார்ப்புக்களை இந்த சபையின் கவனத்திற்குக் கொண்டுவந்திருந்தேன்.

**அரசியல் காழ்ப்புணர்ச்சியே அவதூறுக்குக் காரணம்.**

அதைத்தொடர்ந்து மறுநாள் தை மாதம் 5 ஆம் திகதி வழமைபோல் திட்டமிட்ட வகையில் என் மீதும் எமது கட்சியின் மீதும் எமது அரசாங்கத்தின் மீதும் ஆதாரமற்ற பொய்யாகப்புனையப்பட்ட உண்மைக்குப் புறம்பான பல அவதூறுகளைத் தமிழ் தேசிய கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்கள் சிலர் இந்த சபையில் தெரிவித்திருப்பதையிட்டு நான் மிகவும் வருந்துகின்றேன்.

எம் மீதான அவதூறுகளை இவர்கள் பரப்புவதற்குக் காரணம் அரசியல் காழ்ப்புணர்ச்சிதான்.

நாம் மக்களோடு தொடர்ந்து இருப்பதைக் கண்டும், எமக்குப் பெருகிவரும் ஆதரவைக் கண்டும் இவர்கள் பயப்படுகின்றார்கள். அந்த அரசியல் பயத்தின் காரணமாகவே இவர்கள் வழமைபோல் இவ்வாறு உண்மைகளை திரித்துக் கூறி வருகின்றனர்.

அதுவும் தேர்தல் காலம் என்பதால் மக்களுக்கு நம்பிக்கை கொடுப்பதற்கு எதுவும் இன்றி இவர்கள் பயப்படுகின்றார்கள்.

மக்கள் மீது அவலங்களை உருவாக்குவது, அதை தக்கவைப்பது, ஊதிப் பெருப்பிப்பது, பின் அதை தங்களது அரசியலுக்காக பயன்படுத்துவது. இதுதான் இவர்களது வழமையான செயற்பாடுகள்.

உரிமை உரிமை என்று வெறும் ஊடகங்களுக்காக மட்டும் கூச்சலிடும் இவர்கள் உரிமையை பெற்றுக்கொடுக்கவும் இல்லை. அதற்காக நடைமுறைச் சாத்தியமாக முயலவும் இல்லை. ஆனால் முயல்வதுபோல் நடிக்கின்றார்கள். மக்களின் துயரங்களைத் துடைத்திருந்தால் அதையாவது மக்களிடம் இவர்கள் கூறியிருக்க முடியும். அதுவும் இல்லை.

நாடாளுமன்றம் சென்று என்ன செய்தீர்கள் என்று கேட்டால்.

12 பாம்பு குட்டிக்குப் பல்லு விளக்கினேன் என்பார்கள். கோழி முட்டையில் மயிர் பிடுங்கினேன் சும்மாவா இருந்தேன் என்று கேட்பார்கள். மயிரைக் கட்டி மலையை இழுத்தோம் என்பார்கள், ஆகவே, இவர்கள் தங்களைப் பற்றி மக்களிடம் கூறுவதற்கு இவர்களிடம் எதுவும் இல்லை.

ஆகவேதான் அடுத்தவர்கள் மீது வசை பாடுவதை மட்டுமே தமது அரசியல் தொழிலாக இவர்கள் கொண்டுள்ளார்கள்.

மக்களது ஆதரவை பெறுவதற்காக பொய்களைச் சொல்லி மக்களை கடந்த காலங்களைப் போல ஏமாற்ற நினைக்கின்றார்கள்.

1977 இல் தமிழ்ஈழம் பெற்றுத்தருவோம் ஆணை தாருங்கள் என்று ஏமாற்றித்தான் 18 ஆசனங்களைப் பெற்றார்கள். ஆனாலும், என்ன நடந்தது? 2004 இல் எமக்கு ஏகபிரதிநிதித்துவத்தைத் தாருங்கள் என்று புலிகளின் ஏற்பாட்டில் தங்களுக்குத் தாங்களே வாக்களித்து 22 ஆசனங்களைப் பெற்றார்கள்... அதற்கு என்ன நடந்தது? 2009 இல் சர்வதேசத்திற்கு முன்பாக ஐக்கியத்தைக் காட்டுவோம் எனக் கூறி 14 ஆசனங்களைப் பெற்றார்கள்... அதற்கு என்ன நடந்து கொண்டிருக்கிறது? தற்போது வரவிருக்கின்ற உள்ளூராட்சித் தேர்தலில் ... வலுவான போட்டியில்லையென்ற கோசத்தை வைப்பார்கள்போல் தெரிகின்றது...?

ஆனால், மக்களைத் தொடர்ந்தும் ஏமாற்ற முடியாது. அடுத்த தேர்தலில் 14 ஆசனங்கள் வெறும் நான்காக மட்டும் மாறிவிடும். பலரை சில காலமும், சிலரை பல காலமும் ஏமாற்றலாம், ஆனால் எல்லோரையும் எல்லாக் காலமும் ஏமாற்ற முடியாது.

**'சப்ரா பினான்ஸ்' போல் மகேஸ்வரி நிதியம் கொள்ளையர் கூடாரம் அல்ல.**

மகேஸ்வரி நிதியம் யாழில் இயங்கிய 'சப்ரா யுனிக்கோ பினான்ஸ்' நிறுவனத்தைப்போல, கொள்ளையர் கூட்டத்தின் கூடாரமும் அல்ல. இதை நடத்திக் கொண்டிருப்பவர்கள் கொள்ளையர் கூட்டமும் அல்ல. நுஹேகொடையில் இயங்கிய சக்வித்தி ரணசிங்க அவர்கள் உங்கள் வழியிலேயே அவரும் செல்ல முற்பட்டது இந்த நாடறியும்.

அதிஸ்ட இலாப சீட்டிழுப்பில் வெற்றி பெற்று நாடாளுமன்றம் வந்துள்ள இரு தமிழ் தேசிய கூட்டடைமப்பு உறுப்பினர்களில், ஒருவர் ஊழல் செய்த 'சப்ரா யுனிக்கோ பினான்ஸ்' நிறுவனத்தின் பங்காளர். அடுத்தவர் உடுவில் பெண்கள் பாடசாலையை தங்களது சுயலாபத்திற்கு பயன்படுத்துவதற்காக சீரழிவுச் சட்ட ஆலோசனை வழங்கிய சட்டவாதி.

சேற்றுக்குள் இருக்கும் பண்டிக்கு முன்னால் முத்தை போட்டால் பண்டிக்கு முத்தும் சேறாகவே தெரியும். இது போலவே 'மகேஸ்வரி நிதியமும்' இவர்களது கண்களுக்கு தெரிகிறது.

'மகேஸ்வரி நிதியம்' என்ற மக்கள் சேவை நிறுவனத்தை நிதி மோசடி அமைப்பாகவும், சட்ட விரோத அமைப்பாகவும் தவறாகச் சித்தரித்து தங்களது ஊழலை மறைக்க முயல்கின்றார்கள். உண்மையைத் தெரிந்துகொண்டு பொய் பேசுகின்றார்கள்.

நித்திரை கொள்பவனை எழுப்பலாம், அவ்வாறு நடிப்பவனை எழுப்ப முடியாது என்பது அனுபவ முதுமொழி! இருந்தாலும் நீங்கள் உங்களது அரசியல் காழ்ப்புணர்ச்சிகளை இந்த சபையில் அடுத்தவர்கள் மீது வாந்தியாக கொட்டியதன் துர்நாற்றத்தை அகற்ற விரும்பி நான் சில விடயங்களை இங்கு தெரிவிக்க விரும்புகின்றேன்.

மகேஸ்வரி நிதியம் என்பது சமூக சேவைகள் திணைக்களத்தில் பதியப்பட்ட ஒரு அரசசார்பற்ற நிறுவனமாகும். அதை விட நாடாளுமன்றத்தில் கூட்டிணைப்புச் செய்வதற்காக அமைச்சரவையின் அங்கீகாரமும் பெறப்பட்டது. ஆனால் துரதிஸ்டவசமாக நாடாளுமன்றம் கலைக்கப்பட்டமையினால் அதை முழுமையாகச் செய்ய முடிந்திருக்கவில்லை.

ஆனாலும் இது தற்போது பூரணத்துவம் பெற்றுக்கொண்டிருக்கின்றது. அடுத்து மணல் விலை தொடர்பாக சிலர் உணமை நிலையைத் தெரிந்து கொண்டும் தவறான தகவல்களைத் திட்டமிட்டுப் பரப்பி வருகின்றார்கள்.

யாழ் மாவட்ட செயலகத்தின் விலை நிர்ணயக் குழுவினால் நிர்ணயிக்கப்பட்ட லொறி, மற்றும் உழவு இயந்திரக்கூலி உட்பட இந்த விலை அடங்கும். இதன் அடிப்படையில் லொறியில் கொண்டு செல்வதற்கு கோப்பாய், சாவகச்சேரி 8000/= நல்லூர் , தெல்லிப்பழை உடுவில், சண்டிலிப்பாய் 8500/= யாழ்ப்பாணம், சங்கானை 9000/= காரைநகருக்கு 10000/= ஊர்காவற்றுறை, வேலணைக்கு 11500/= பருத்தித்துறைக்கு, 6000/= பருத்தித்துறைக்கு உழவு இயந்திரத்தில் கொண்டு செல்வதற்கு 2250/=

இவைகள் யாழ் மாவடட செயலகத்தின் விலை நிர்ணயக்கட்டுப்பாட்டு குழுவினால் நிர்ணயிக்கப்பட்ட விலைகள் ஆகும். அது போல மணல் அகழ்வு பிரதேசத்தில் இருந்து விநியோகப் பகுதி வரை மணலை எடுத்துச் செல்வதற்கு உழவு இயந்திரத்திற்கு 900/= இதுதான் உண்மை நிலை.

அத்தோடு ஏனைய பல மாவட்டங்களோடு ஒப்பிடுகையில் யாழ்ப்பாணத்தில் மட்டுமே மண் மலிவு விலையிலும் கிடைக்கின்றது

கடந்த காலங்களில் புலிகளின் மோசடிகளைக் கண்டித்திருந்த ஈ.பி.டி.பியினர் அதே மோசடிகளை செய்யலாமா என்று கேள்வி எழுப்பியுள்ள 'சப்ரா யுனிக்கோ பினான்ஸ்' ஊழல் உறுப்பினர். புலிகள் கடந்த காலங்களில் மண் மீட்பு என்ற பெயரில் யாழ் குடாநாட்டு வளங்களை மணல் உட்பட சுரண்டி எடுத்த போது அதைப் பார்த்து இரசித்துக் கொண்டிருந்தவர், ஆதரித்துக் கொண்டிருந்தவர், நியாயப்படுத்திக் கொண்டிருந்தவர்.

கடந்த வருட இறுதியில் இது போன்ற தமது ஊழலின் நாற்றங்களுக்கு தமது சகாட்களையும் அழைத்து விருந்து வைத்து வெள்ளி விழா கொண்டாடியிருந்தார்கள்.

இவரின் ஊழல்களைப் பாதுகாக்கின்ற இவரினது உதயன் பத்திரிகை நிறுவனம் அரசிற்கு இதுவரை செலுத்த வேண்டிய இறைவரியைச் செலுத்தியுள்ளதா? என்பதை இச்சபையில் வெளிப்படுத்துமாறு கேட்க விரும்புகின்றேன்.

இப்போது அமைதிச் சூழல் திரும்பி மீண்டும் சிவில் நிர்வாகம் இயங்கத் தொடங்கி விட்டது. புலிகளின் காலத்தைப்போல் விரும்பிய இடங்களில் விரும்பிய நேரங்களில் எல்லாம் மண் அகழ முடியாது.

ஆகவே, சட்டத்தை நிலைநாட்டும் அரசாங்கத்தின் சிவில் நிர்வாகத்திற்குக் கட்டுப்பட்டே மகேஸ்வரி நிதியம் இந்த சேவையில் ஈடுபடுகின்றது.

**குடத்தனையில் சுட்டுக்கொல்லப்பட்ட இளைஞன் யார்?**

குடத்தனையில் சுட்டுக்கொல்லப்பட்ட இளைஞர் யார் என்று தெரியாமலேயே இவர்கள் அலம்பிக்கொண்டிருக்கின்றார்கள்.

கௌரவ உறுப்பினர் சுமந்திரன் அவர்கள் இறுதி ஊர்வலத்தில் ஈ.பி.டி.பியினர் பெருமளவில் கலந்துகொண்ட விடயம் குறித்து கேள்வி எழுப்பியிருந்தார். நாம் ஏன் இறுதி ஊர்வலத்தில் கலந்து கொண்டோம்?...... அவர் எங்களது ஆதரவாளர். மகேஸ்வரி நிதியத்தால் இலவசமாக நடத்தப்படுகின்ற கல்வி நிறுவனங்களில் ஒன்றான நியூட்டன் அக்கடமி நிறுவனத்தின் காப்பாளராக இருந்தவர். அதில் அவரது மனைவி இன்று ஆசிரியையாக இருக்கின்றார். இந்த உறவுகள் காரணமாக எங்களது கட்சி சார்ந்தவர்கள் மகேஸ்வரி நிதியத்தைச் சேர்ந்தவர்கள் என பலரும் அவரது இறுதிச் சடங்குகளில் கலந்து கொண்டனர்.

இங்கே அண்டப் புழுகனும், ஆகாசப் புழுகனுமாகச் சேர்ந்து எம் மீது அநாகரீகமான முறையில் அவதூறு பொழிகிறார்கள்.

அண்டப்புழுகன் ஆகாசப்புழுகன் கதை தெரியுமா?....

தூரத்தில் தெரியும் ஒரு மலையை பார்த்து ஒருவன் சொன்னான். அங்கே பார் அந்த மலையில் ஒரு எறும்பு ஊர்ந்து கொண்டு போகுது என்றான்.. இவன் யார் அண்டப்புழுகன்.

அதற்குப் பக்கத்தில் நின்றவன் . பொறு! பொறு!. அங்கே பார் அந்த எறும்பு நொண்டி நொண்டித்தான் ஊர்ந்து போகுது... என்றான். இவன் யார்? ஆகாசப்புழுகன்.

தமிழ் மக்களின் தலைவிதி... அண்டப்புழுகர்களும், ஆகாசப்புழுகர்களும் இப்போது தமிழ் மக்களின் பிரதிநிதிகளாக இருப்பதாகும்.

இவ்வாறு அண்டப்புழுகுகளை சொலலித்தான் அப்பாவித் தமிழர்களை ஏமாற்றி 'சப்ரா யுனிக்கோ பினான்ஸ்' நடத்தினார்கள்.

நான் யார் நான் யார் ? என்ற தலைப்பில் முன்னாள் 'சப்ரா யுனிக்கோ பினான்ஸ்' ஊழல் நிதி நிறுவனத்தில் உரிமையாளரும் நிர்வாக முகாமையாளரும் என்ற தலைப்பில் தற்கொலை செய்யும் நிலைக்குச் சென்று பாதிக்கப்பட்ட எமது தமிழ் மக்கள் கௌரவ நாடாளுமன்ற உறுப்பினர் சரவணபவனின் புகைப்படத்துடன் ஒரு துண்டுப் பிரசுரத்தை வெளியிட்டிருந்தனர். ஆவணங்கள் இணைக்கப்பட்டுள்ளன.

இதை மறுத்து சரவணபவன் வெளியிட்ட மறுப்பறிக்கையில் உறுதிப்படுத்தப்படும் உண்மைகள்!

**ஊடக சுதந்திரத்தை கொன்றொழித்தவர் அது பற்றி உபதேசம் செய்யலாமா?**

ஊடக தர்மம் பற்றி உபதேசம் செய்கிறார். ஆனால் தினக்குரல், வீரகேசரி

# வழிமுறைகள் தோற்றதன்...

8ம் பக்கத் தொடர்ச்சி...

பத்திரிகைகள் சிங்கள பேரினவாதத்தின் பத்திரிகை என்று புலிகளுக்கும் அதே தினக்குரல், வீரகேசரி மற்றும் வலம்புரி பத்திரிகைகள் தமிழ்த் தேசிய வாதத்தின் பத்திரிகைகள் என்று அரசாங்கத்திற்கும் இருபக்கமும் இருவேறு போலி முகங்களைக் காட்டிப் பத்திரிகைத் தடை ஏற்படுத்த, பொய்யுரைத்த கடந்த கால வண்ட வாளங்களை சகலரும் அறிவார்கள்.

கசாப்புக்கடைக்காரன் ஜீவ காருண்யம் பேசுவது போல், கொள்ளைக்காரனே கொள்ளைகளைப் பற்றிப் பேசுகிறார். ஊடக தர்மத்தைக் கொன்றொழித்தவர்களே ஊடக தர்மம்பற்றி உபதேசம் செய்கிறார்கள்.

ஊடக சுதந்திரத்தை துஸ்பிரயோகம் செய்து, கடந்த காலங்களில் எமது மக்களைக் கொன்றவர்களும் இவர்கள்தான் கொல்லக்கொடுத்தவர்களும் இவர்கள் தான்.

சங்கிலியன் படை, எல்லாளன் படை, சீறும் படை, சீறாத படை, பொங்கியெழும் படை என்று மக்களுக்கு எதிராக எச்சரிக்கை விடப்பட்டபோது, இதை தமது ஊடகங்களில் வெளியிட்டு எமது மக்களின் வாழ்விடங்களை வன்முறைக் களமாக மாற்றி எமது மக்களை அச்சுறுத் தியவர்கள் இவர்கள்.

நாங்கள் விடுதலைக்காக ஆயுதம் ஏந்தியவர்கள். இலங்கை இந்திய ஒப் பந்தத்தின் பின்னர் ஜனநாயக வழிக்கு வந்தவர்கள். பாதுகாப்பிற்கு வைத்திருந்த ஆயுதங்களையும் நாம் ஏற்கனவே ஒப்படைத்து விட்டோம்.

எமது உறுப்பினர்களின் கரங்களில் ஆயுதம் இருந்திருந்தால் அவர்கள் தெருத்தெருவாக தினமும் சுட்டுக்கொல்லப்பட வேண்டி வந்திருக்காது. நிராயுதபாணிகளாக இருந்த காரணத்தினால் மட்டுமே அவர்கள் சுட்டுக்கொல்லப்பட்டார்கள்.

உடுவில் பெண்கள் கல்லூரியைத் தமது சுயலாபங்களுக்காக அபகரிக்க முறபட்டவர்களுக்கு முன்னின்று ஆலோசனை வழங்கிய கௌரவ உறுப்பினர் அவர்களின் கைகளில் ஆயுதம் இருந்திருந்தால் எப்படி இருந்திருக்கும் என்பதற்கு உடுவில் பெண்கள் கல்லூரி சம்பவம் ஒரு சிறந்த உதாரணம். இவர்கள் எவ்வாறு நடந்து கொண்டார்கள் என்பதற்கு இவர்கள் ஆயுதம் இல்லாமலே மிக அருவருக்கத்தக்க வகையில் நடந்து கொண்டார்கள் என்பதற்கு அந்த உடுவில் பெண்கள் கல்லூரி சமூகததினர் ஒரு சாட்சியமாக இருககின்றனர்.

ஏன் தமிழ்த்தேசிய கூட்டமைப்பு பாராளுமன்ற உறுப்பினர்கள் தமது பாதுகாப்பு என்ற போர்வையில் ஆயுதங்களைக் காவித்திரியவில்லையா?...... வேங்கை வேதாந்தம் பேசிய தாம் மாமிசம் புசிப்பதில்லை என்பது போல் இவர்கள் பேசுகிறார்கள்.

இந்தியப் படை காலகட்டத்தில் இவர்கள் எவ்வாறு நடந்து கொண்டார்கள்?..... ஒரு பக்கம் புலிகளும் இன்னொரு பக்கம் இவர்களும் எதிரும் புதிருமாகப் போட்டிபோட்டுக் கொண்டு இருண்ட காலத்தை ஏற்படுத்தினார். இவர்கள் இந்தியப் படை காலத்தில் தவறாக வழிநடத்தியவர்கள்.

அது போலவே இவர்களும் ஆயுதப்போராட்டத்தை எட்டிப் பார்த்து, எட்டவில்லை என்றதும் அது கூடாது என்றார்கள். இப்போது ஆயுதக்குழு என்று எம்மீது குற்றம் சாட்டுகின்றார்கள். தமிழ் தேசிய கூட்டமைப்பு உறுப்பினர்கள் வன்முறைகளை தூண்டவில்லையா? ஆயுதங்களை ஏந்தவில்லையா? தற்போதும் வைத்திருக்கவில்லையா? சந்திரநேரு யாருடைய ஆயுதத்தால் தன்னுடைய காலை சுட்டுக்கொண்டார்? தனது ஆயுதத்தால் தனது காலை தானே சுட்டுக்கொண்டார்.

கறை படியாத கரங்கள் இருந்தால் கைகளை உயர்த்துங்கள் பார்க்கலாம்?....

செய்தல்! செய்வித்தல்!. கொல்லுதல்!. கொல்லுவித்தல்!.

இவைகளுக்கு இடையில் என்ன வேறுபாடு கூறுங்கள் பார்க்கலாம்?

தங்களால் எதிர்கொள்ள முடியாத அரசியல் எதிரிகளைப் பார்த்து இவர்களுக்கு இயற்கை மரணமே இல்லை என்று மேடைகளில் கூச்சலிட்டவர்கள் இவர்கள். இதன் அர்த்தம் என்ன என்று பகிரங்கமாகக் கேட்கின்றேன். தண்டனைக் கோவை சட்டத்தின்படி (Penal Code) கொன்றவர் மாத்திரமல்ல தண்டனைக்குரிய குற்றவாளி. அதற்குத் துணையாகவும், தூண்டுதலாகவும் இருநதவர்களும் குற்றவாளியாகக் கருதப்படுவார்கள்.

இதில் இன்னொரு வேடிககை நாங்கள் ஆயுதங்களையே தொட்டறியோம் என்கின்றார்கள் இவர்கள். ஆனால் அவர்கள் அன்றும் T.N.A இன்றும் T.N.A அன்று இவர்கள் தமிழ்த்தேசிய இராணுவத்தை (T.N.A) அமைத்தார்கள். இவர்கள் இந்தியாவில் இராணுவப் பயிற்சி எடுத்து மனனாரில் இறங்கியபோது புலிகளால் இவர்களது கைகள் கட்டப பட்டு குப்பறக்கிடத்தி வாகனத்தில் கொண்டு சென்றதை எனது மன்னார் பயணத்தின்போது நேரில் பார்த்தேன்.

திராட்சைப் பழத்தை பார்தது நரி சொன்னதாம் கைக்கும், புளிக்கும் என்று எட்டிப் பார்த்த நரி எட்டவில்லை என்பதற்காக அப்படி கூறியது.

அப்போது தமிழ்த்தேசிய இராணுவம். இப்போது தமிழ் தேசியக் கூட்டமைப்பு.

சபாநாயகர் அவர்களே!....

இந்த நாட்டில் இயல்பு வாழ்க்கை பாதிப்படைவதால் யாருக்கு நட்டம், யாருக்கு இலாபம் என்று இங்கு இருப்பவர்கள் எண்ணிப்பார்க்க வேண்டும். இயல்பு வாழ்க்கை எங்களுக்கு இலாபம். இயல்பு வாழ்க்கை சீரழிக்கப்படுவது தமிழ் தேசிய கூட்டமைப்பினருக்கு இலாபம். அப்படியாயின் இயல்பு வாழ்க்கையை நாம் எப்படிச் சீரழிக்க முடியும் என்பதைச் சிந்திக்க வேண்டும்.

நாங்கள் ஜனநாயக வாதிகள், கருத்துக்களை கருத்துக்களால் எதிர்கொள்பவர்கள். இதை இவர்கள் நன்கு உணர்ந்துதான் எம்மீது துணிச்சலாக அவதூறு பொழிகிறார்கள். ஆகவே நாங்கள் ஜனநாயக வாதிகள் என்பதை இவர்கள் நிரூபித்து விட்டார்கள்.

**உதவிக் கல்விப் பணிப்பாளர் படுகொலையில் கூட்டமைப்பு?**

வலிகாமம் வலய உதவிக் கல்விப்பணிப்பாளர் சிவலிங்கம் அவர்களின் கொலை குறித்து இங்கே நீலிக்கண்ணீர் வடிக்கின்றார்கள்.. கௌரவ உறுப்பினர் சுமந்திரன் அவர்கள் தனது பேச்சில் ஊசி முனைக்காதுக்குள் ஒட்டகத்தை நுழைப்பது போல் அந்தக் கொலையாளி தலைபுக முடியாத புகைக்கூட்டுக்கால் தன்னை நுழைத்து உள்வந்து சுட்டார் என கற்பனைக் கதை வடித்திருக்கிறார். ஆனால் எனது சந்தேகம் வலுக்கின்றது.

உதவி கல்விப்பணிப்பாளர் சிவலிங்கம் அவர்களின் படுகொலையில் தமிழ்த்தேசிய கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவருக்கு சம்பந்தம் இருப்பதாக விசாரணைகளில் தெரியவருகிறது. இது விரைவில் அம்பலத்திற்கு வரப்போகின்றது... அதனால் என்னவோ கௌரவ உறுப்பினர் சுமந்திரன் தமது சக உறுப்பினரைப் பாதுகாப்பதற்காகவோ இவ்வாறான கதைகளைப் புனைவதால் அது உறுதிப்படுகின்றது போல் தெரிகின்றது.

கடந்தகால 'சப்ரா யுனிக்கோ பினான்ஸ்' பகற்கொள்ளை முதற்கொண்டு இவர்களது வண்டவாளங்கள் யாவும் வெளிவரப் போகின்றது. சட்டத்தின் முன் நிறுத்தப்படுவார்கள்.

கோவிலில் சங்கிலியை திருடிவிட்டு திருடனே திருடன்.. திருடன்.. பிடி.. பிடி.. எனறு கத்திக்கொண்டு தப்பியோடுவதைப்போல் இவர்களும் தப்பிக்க முயல்கிறார்கள்.

யாழில் ஒரு பத்திரிகை. அதில் வேலை செய்பவர்களுக்கு ஒழுங்கான வேதனம் கிடைப்பதில்லை. சிலருக்கு எந்த வேதனமுமே வழங்கப்பட்டிருக்கவில்லை.

அந்த ஊழியர்கள் என்னோடு தொடர்பு கொண்டு கண்ணீர் விட்டு அழுகின்றார்கள். 'சப்ரா யுனிக்கோ பினான்ஸ்' மூலம் கொள்ளையடித்த பணத்தைக் கொண்டு ஆரம்பித்த அந்த பத்திரிகையில் ஊழியர்களுக்கு வேதனம் இல்லை. அதன் உரிமையாளர் மட்டும் இன்னமும் அநத பணத்தில் பெரும் பகுதியை வைப்பில் இட்டு ஆடம்பர வாழ்க்கை அனுபவித்து வருகிறார். இதை நாம் தமிழ்த்தேசிய கூட்டமைப்பின் கொள்கைப் பிரசசினையாக எடுக்கவில்லையே.

நல்லூர் கூட்டுறவுச் சங்க மோசடியில் மூத்த தமிழரசு கட்சி உறுப்பினர் ஈடுபட்டதாக சங்க உறுப்பினர்கள் குற்றம் சாட்டி அவரை பதவியிலிருந்து விலக்கி விசாரணைக்கு நிறுத்தியிருக்கிறார்கள். அதற்காக நாங்கள் தமிழரசுக் கட்சி ஊழல் மோசடி செய்தது என்று கூறினோமா?...

தமிழரசுக் கட்சி உறுப்பினர் ஒருவர் தனது சொந்த மகளையே பாலியல் வல்லுறவு செய்திருக்கின்றார். அதற்காக தமிழரசுகட்சி இவ்வாறு அசிங்கமான செயலில் ஈடுபட்டதாக நாம் கூறினோமா?...

காரைநகரில் சிறுமி ஒருத்தியை பாலியல் வல்லுறவு செயத குற்றத்தில் மாட்டியிருந்தவரை சட்டத்தின் பிடியில் இருந்து மீட்பதற்காக தமது சட்டத் துறையைப் பயன்படுத்தியவர்களே இந்த தமிழ்த்தேசிய கூட்டமைப்பினர்கள். இதை நாம் தமிழ்த்தேசிய கூட்டமைப்பின் கொள்கை என்று சொன்னோமா?

தமிழ் மக்களுக்கு கொடுத்த வாக்குறுதிகளைக் காப்பாற்ற வக்கில்லாதவர்கள். கிடைத்த சந்தர்ப்பங்களை எல்லாம் போட்டுடைத்தவர்கள் தமிழ் மக்களை முள்ளிவாய்க்காலுக்குள் தள்ளி விட்டவர்கள். கொலைகளுக்கு நியாயம் கற்பித்து ஊடக வன்முறை நடத்துபவர்கள்... இளைஞர், யுவதிகளை இரத்தம் சிந்துமாறு கேட்டுவிட்டு தாம் மட்டும் ஓடி ஒளித்துக்கொண்டவர்கள்.

புலிகள் இருந்தபோது புலிகளுக்கு ஒரு முகம், அரசாங்கத்திற்கு இன்னொரு முகம். மக்களுக்கு அதை விடவும் இன்னொரு முகம். மூன்று முகங்களாக தமிழரசுக் கட்சி தோற்றமளிக்கின்றது.

தமிழ் மக்களுக்கு தமிழரசு அமைப்போம் என்றார்கள். அரசாங்கத்திற்கு சமஸ்டி ஆட்சி என்று சொல்லி புலுடா விட்டார்கள். நாங்கள் அப்படி அல்ல. அரசாங்கத்திற்கோ, அல்லது மக்களுக்கோ ஒரே முகம்தான்.

நடைமுறைக்கு சாத்தியமில்லாத விடயங்களைப் பேசி தமிழ மக்களை ஏமாற்றும் ஏமாற்று வித்தைக்காரர்கள்.

இந்தியாவிற்குச் சென்று கதைத்துவிட்டு இந்தியா தமது கொள்கையை ஏற்றுக்கொள்கின்றது என்று இங்கு வந்து கதை அளக்கின்றார்கள்.

**13 ஆவது திருத்தச்சட்டமே தமிழ் மக்கள் பிரச்சினைக்குத் தீர்வு.**

இந்தியா தனது நிலைப்பாட்டில் தெளிவாகவே இருக்கின்றது. நான் தனியாகவும் ஜனாதிபதி அவர்களோடு சேர்ந்தும் டெல்லி சென்றபோது அவர்கள் அன்று சொன்னதைத் தான் இன்றும் சொல்கிறார்கள்.

அதாவது 13 வது திருத்தச் சட்டத்தை ஆரம்பமாகக் கொண்டே தமிழ் மக்களுடைய அரசியல் உரிமைப் பிரச்சினைக்குத் தீர்வு காணப்பட வேண்டும். இதை இலங்கை வந்திருந்த இந்திய வெளிவிவகார அமைச்சர் கௌரவ கிருஸ்ணா அவர்களும் வெளி விவகாரச் செயலாளர் நிருபாமராவ் அவர்களும் நேரிலும் இலங்கை இந்திய ஊடகங்களுக்கு ஊடாகவும் வெளிப்படுத்தியிருக்கிறார்கள் உறுதிப் படுத்தியிருக்கிறார்கள்.

அப்போது தங்களது குட்டு வெளித்து விட்டது என்று மௌனமாக இருந்து விடும் வெட்கம் கெட்ட தலைமைகள்.

டக்ளஸ் தேவானந்தா பாம்புக்கு பல்லு விளக்குகின்றார். கடல் நீர் முழுவதையும் எண்ணையாக்கி கடல் மீன்கள் அனைத்தையும் ஈ.பி.டி.பி அப்படியே பொரித்து சாப்பிடுகின்றது.

இப்படித்தான் இவர்களது போலித்தனங்களும் புலுடாக்களும்.

நாங்கள் எரித்தாலும் மணக்கும் சந்தணக்கட்டைகள். தூற்றுவார் தூற்றட்டும் போற்றுவார் போற்றட்டும். நாம் செல்லும் வழி நேர்வழி.

தமிழ் மக்களிடையில் இனி இந்த பருப்பெல்லாம் வேகாது. எமது மக்கள் தங்களது நியாயத்தீர்ப்பை எழுதும் நாட்கள் நெருங்கிக்கொண்டிருக்கிறது.

உங்களது வழிமுறைகள் தோற்றுப்போய்விட்டது. ஆகவே தான் இப்போது நீங்கள் இணக்க அரசியல் வழிமுறை நோக்கி வந்து கொண்டிருக்கின்றீர்கள்.

இது கடந்தகாலங்களைப் போல் போலியாக இன்றி உண்மையானதாக இருக்க வேண்டும். நீங்கள் அரசாங்கத்தையும் ஏமாற்ற முடியாது. மக்களையும் ஏமாற்ற முடியாது. உங்களை நீங்களே ஏமாற்றுகின்றீர்கள்.

அது போல் அரசியல் காழ்ப்புணர்ச்சியில் அடுத்தவர்களை வசை பாடும் அரசியலை கைவிட்டு நேர்மையான அரசியலுக்கு வாருங்கள் என்று தமிழ் மக்களின் பேரால் உங்களுக்கு பகிரங்க அழைப்பு விடுக்கின்றேன்.

ஊடகங்களை உற்று நோக்கி பார்த்தால் தென்னிலங்கையில் வன்முறைச்சம்பவங்கள் தமிழ் நாட்டில் வன்முறைச் சம்பவங்கள் புலம்பெயர் நாடுகளில் குறிப்பாக தமிழர்களின் வீடுகளில் கொள்ளைகள். இவ்வாறு தான் செய்திகள் வருகின்றன.

ஆகவே இது ஒரு மனித சமூகத்தில் நிலவுகின்ற குறைபாடுகளாகவும் குற்றச்செயல்களாகவுமே நோக்கப்படவேண்டும்.

ஆனாலும் கடந்த கால யுத்த அவலங்களை தாங்கி நடந்து வந்த எமது மக்களின் வாழ்விடங்களில் இது போன்ற வன்முறைச்சம்பவங்கள் நடப்பதை மரத்தால் விழுந்தவனை மாடேறி மிதிப்பது போன்ற துயரமாகும்.

**உண்மைக் குற்றவாளிகளைக் கண்டுபிடிக்க கூட்டமைப்பினர் உதவ வேண்டும்.**

ஆகவே மக்களின் வாழ்விடங்களில் நடக்கும் வன்முறைச் சம்பவங்கள் குறித்து நாம் விசேட கவனம் செலுத்தி வருகின்றோம். பொலிஸாருடன் இணைந்து விழிப்புக்குழுக்கள் அமைத்து வருகின்றோம். மக்களுக்கு விழிப்பூட்டி வருகின்றோம். அதேவேளை உண்மையான குற்றவாளிகள் அனைவரையும் கண்டறிந்து சட்டத்தின் முன் நிறுத்தியும் வருகின்றோம்.

யாழில் நடக்கும் வன்முறைச் சம்பவங்களை ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ அவர்களுக்கும் பாதுகாப்பு செயலாளர் கோதாபாய ராஜபக்ஷ அவர்களுக்கும் மற்றும் யாழில் உள்ள படைத்தளபதிகள் பொலிஸார் அனைவரோடும் நான் கலந்துரையாடியதையடுத்து அவர்கள் மேலும் அக்கறை கொண்டு சட்டம் ஒழுங்கை நிலை நாட்டி வருகின்றார்கள்.

இதன் மூலம் வன்முறைச் சம்பவங்களில் ஈடுபட்ட பலர் கைது செய்யப்பட்டிருக்கிறார்கள். இன்னும் எஞ்சி இருக்கும் குற்றவாளிகளையும் கைது செய்வதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன.

ஆகவே வன்முறைச் சம்பவங்களை தடுத்து நிறுத்தும் முயற்சியில் ஈடுபடும் எம்மை வெறும் அரசியல் காழ்ப்புணர்ச்சிகளுக்காகக் குற்றம் சுமத்துவதை விடுத்து உண்மையான குற்றவாளிகளை கண்டறிவதற்கு தமிழ்த்தேசிய கூட்டமைப்பினர் உதவ முன்வர வேண்டுமென எமது மக்களின் சார்பாக நான் மனிதாபிமான வேண்டுகோள் விடுக்கின்றேன்.

பாவம் ஒரு பக்கம், பழி இனனொரு பக்கம் என்பது போல் அரசியல் காழ்ப்புணர்ச்சிகளுக்காக அடுத்தவர்கள் மீது குற்றத்தை சுமத்துவதால் உண்மையான குற்றவாளிகள் சட்டத்தின் பிடியிலிருந்து தப்பித்துக்கொள்கிறார்கள். தயவு செய்து இதற்கு வழிவகுக்க வேண்டாமென்றும் கேட்டுக்கொள்கின்றேன்.

# நாட்டிற்கு களங்கம் ஏற்படுத்தும் முயற்சியை தடுத்து நிறுத்த நடவடிக்கை எடுக்கவேண்டும்

## தூதுவர் ஆரியசிங்க




(கொழும்பு)

நாட்டின் நற்பெயருக்கு களங்கம் ஏற்படுத்த முயற்சிப்போரை தடுத்து நிறுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டுமென ஐரோப்பிய ஒன்றியத்திற்கான இலங்கைப் பிரதிநிதி ரிவந்த ஆரியசிங்க தெரிவித்துள்ளார்.

நாட்டின் நன்மதிப்பிற்கு குந்தகம் ஏற்படுத்த முயற்சிப்போருக்கு எதிராக வெளிநாடுகளில் வாழும் இலங்கையர்கள் அணி திரள வேண்டுமென அவர் வலியுறுத்தியுள்ளார். 63 ஆவது சுதந்திர தினத்தை முன்னிட்டு கடந்த 6 ஆம் திகதி பிரசல்ஸில் நடைபெற்ற விசேட நிகழ்வுகளில் கலந்து கொண்ட போது புலம்பெயர் இலங்கையர்களிடம் அவர் இந்தக் கோரிக்கையை விடுத்துள்ளார்.

சுதந்திர தினத்தைக் கொண்டாடுகின்ற போதிலும், இலஙகை இன்னமும் நெருக்கடிகளையும் சவால்களையும் எதிர்நோக்கி வருகின்றது என்பதனை அனைவரும் நினைவில் நிறுத்திக் கொள்ள வேண்டுமென அவர் வலியுறுத்தியுள்ளார்.

இனங்களுக்கு இடையில் நல்லிணக்கத்தை ஏற்படுத்தி நாட்டு மக்களின் அபிவிருத்தியை மேம்படுத்த அரசாங்கம் தீவிர முனைப்பு காட்டுகின்ற போதிலும் சில தரப்பினர் இந்த முயற்சிகளை சீர்குலைக் கும் நாச வேலைகளில் ஈடுபட்டு வருவதாக அவர் சுடடிக் காட்டியுள்ளார். இலங்கைக்கு எதிராக மேற்கொள்ளப்படும் சூழ்ச்சித் திட்டங்களை வெறுமனே வேடிக்கை பார்த்துக் கொணடிருக்கக் கூடாது எனவும், அதறகு எதிராக போராட வேண்டும் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.



(கொழும்பு)

குருநாகல் பொல்பெத்திகம பிரதேசத்தை சேர்ந்த ரோஹினி ராஜபக்ஷ வயது (35) கடந்த டிசம்பர் 21 ஆம் திகதி பணிப்பெண்ணாக சவுதி அரேபியாவிற்கு சென்றார்.

இதன் போது ரோஹினி சுகவீனம் காரணமாகப் பாதிக்கப்பட்டதால் சவுதி அரேபியாவில் அவர் பணிபுரிந்த வீட்டு உரிமையாளர் அவரை வைத்தியசாலையில் அனுமதித்துள்ளார்.

சுகயீன நிலை அதிகரித்ததால் கடந்த 4 ஆம் திகதி ரோஹினி நாடு திரும்பினார். குருநாகல் போதனா வைத்தியசாலையில் அவர் சோதனை செய்யப்பட்டபோது அவரது உடம்பிலிருந்த ஊசித்துண்டுகள் சில கண்டுபிடிக்கப்பட்டன.

ரோஹினியின் உடம்பில் 7 ஊசித்துண்டுகள் காணப்படுவதாக மேற்கொள்ளப்பட்ட சோதனையின் போது வைத்தியர்கள் கண்டுபிடித்துள்ளனர்.

# சிங்களக் குடும்பங்களுக்காக மணலாற்றில் காணி ஒதுக்கீடு

(கொழும்பு)

மணலாற்றில் புதிய சிங்களக் குடியேற்றங்களை மேற்கொள்வதற்கு அரசாங்கம் திட்டமிட்டுள்ளதாகத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

மகாவலி அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் குடியேற்றப்பட்டவர்களின் மூன்றாவது தலைமுறையினருக்குப் போதிய காணிகள் இல்லை என்றும் அவர்களுக்கு வவுனியா மற்றும் பொலனறுவையில் காணிகள் வழங்கப்படவுள்ளதாகவும் அரசாங்கம் அறிவித்துள்ளது.

இது தொடர்பாக மகாவலி அதிகாரசபையின் பணிப்பாளர் நாயகம் திசநாயக்க தகவல் வெளியிடுகையில் -

வேகமான சனத்தொகை வளர்ச்சியால் மகாவலி வலயங்களில் காணிகளுக்குப் பற்றாக்குறை ஏற்பட்டுள்ளது.

தற்போது சுமார் 1 லட்சம் குடும்பங்களுக்கு காணிகள் இல்லை. இவர்களுக்கு வவுனியா, பொலநறுவை மாவட்டங்களில் உள்ள காணிகள் வழங்கப்பட்டுக் குடியமர்த்தப்படவுள்ளனர்.

மகாவலி வலயங்களில் வழஙகபபட்ட காணிகள் இரண்டு துண்டுகளாகவே பிரிக்கக்கூடியவை.

அதனால் மூன்றாவது தலைமுறையினருக்கு காணிப் பற்றாக்குறை ஏற்பட்டுள்ளது. அதைவிடக் குடும்பங்களில் அதிகளவு உறுப்பினர்களும் உள்ளனர்.

மணலாற்றில் உள்ள மகாவலி எல் மற்றும் பொலநறுவையில் உள்ள மகாவலி வலயங்களில் காணிகள் உள்ளன.

ஆனால், இங்கு அடிப்படை வசதிகள், குடியிருப்பு போன்றவை தரமுயர்த்தப்பட வேண்டும்.

இங்கு இரு போகங்களும் பயிர்ச்செய்கைகளை மேற்கொள்வதற்கான நீர்ப்பாசன வசதிகளைச் செய்து கொடுக்கும் நடவடிக்கைகளை மகாவலி அதிகாரசபை மேற்கொண்டு வருகிறது என்று அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

அதேவேளை, வவுனியா மாவட்டத்தில் நெடுங்கேணி தெறகிலும், கனகராயன் ஆற்றின் கரையோரங்களிலும் சிங்களக் குடியேற்றங்களை நிறுவும் திட்டம் அரசாங்கத்திடம் இருப்பதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

# அரச தொழில் வாய்ப்பைப் பெற்ற முன்னாள் புலிகளின் உறுப்பினர்கள்

(கொழும்பு)

புலிகளின் முன்னாள் உறுப்பினர்களாக இருந்த பலர் அரசாங்கத் தொழில் வாய்ப்பைப் பெற்றுக் கொண்டுள்ளதாக அரசாங்கம் தெரிவிக்கின்றது.

இறுதிக்கட்ட யுத்தத்தின் போது அரச படைகளிடம் சரணடைந்த மற்றும் கைது செய்யப்பட்ட புலி உறுப்பினர்களில் புனர்வாழ்வழிக்கப்பட்டவர்களுக்கே அந்த வாய்ப்புக் கிட்டியுள்ளது.

அதன் பிரகாரம் புனர்வாழ்வளிக்கப்பட்ட பின் சமூகமயப் படுத்தப்பட்ட முன்னாள் புலி உறுப்பினர்கள் நூற்றி ஐம்பது பேர் தற்போதைக்கு அரசாங்கத் தொழில்களில் இணைத்துக் கொள்ளப்பட்டுள்ளார்கள்.

அவர்களில் நூறுபேர் வட மாகாணத்தின் பல பகுதிகளிலும் அமைந்திருக்கும் இலங்கைப் போக்குவரத்துச் சபையின் பிராந்திய டிப்போக்களில் சாரதிகளாகத் தொழில் வாய்ப்பைப் பெற்றுக் கொண்டுள்ளார்கள்.

ஏனையோர் மருத்துவமனைகளிலும் மற்றும் ஆசிரியர் நியமனம் என்பனவற்றைப் பெற்றுக் கொண்டுள்ளதாக புனர்வாழ்வு ஆணையாளர் நாயகம் பிரிகேடியர் சுதந்த ரணசிங்க தெரிவித்தார்.

# அரிசி விலை அதிகரித்தால் நடவடிக்கை என அறிவிப்பு

(கொழும்பு)

வெள்ளம் காரணமாகப் பாதிக்கப்பட்ட பிரதேசங்களில் அரிசியின் வில்லயை உயர்த்துவதற்காக கட்டுப்பாட்டு விலையை விட அதிக விலைக்கு விற்க முயற்சிக்கும் வர்த்தகர்களைக் கண்டுபிடித்து அவர்களுக்கு எதிராக நடவடிக்கை மேற்கொள்ளும் பணியில் நுகர்வோர் அதிகாரசபை ஈடுபட்டுள்ளதாக அமைச்சர் ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ தெரிவித்தார்.

பெரும்பாலான வர்த்தகர்கள் அரிசியைப் பதுக்கி வைத்து செயற்கைத் தட்டுப்பாட்டை உருவாக்கி தாங்கள் களஞ்சியப்படுத்தி வைத்துள்ள அரிசிகளை அதிக விலைகளுக்கு விற்பதற்கு காத்திருப்பதாக அவர் குறிப்பிட்டார்.

வெள்ளம் காரணமாக பெரும்பாலான இடங்களிலுள்ள வயல் நிலங்கள் சேதமடைந்துள்ளதால் நாட்டில் அரிசி விநியோகத்தில் பாதிப்பு ஏற்படாது.

கடந்த தடவை எதிர்பார்த்தளவு அறுவடை கிடைத்தமையே இதற்கு காரணம் என



அமைச்சர் ஜோன்ஸ்டன் பெர்னான்டோ தெரிவித்தார்.

அரிசி வர்த்தகர்களுக்கு மத்தியிலுள்ள சில அரிசி மாபியாக்கள் இயற்கை அனர்த்தத்தை பயன்படுத்தி விலையை அதிகரிக்க முயற்சிப்பதாகவும் அது தடுத்து நிறுத்தப்பட்டுள்ளதாக அவர் கூறினார்.

ஒரு கிலோ கிராம் சம்பா அரிசி 70 ரூபாவாகவும் வெள்ளை மற்றும் சிவப்பு அரிசிகளுக்கு 60 ரூபாவுமாக கட்டுப்பாட்டு விலை நிர்ணயிக்கப்பட்டுள்ளது என அவர் மேலும் குறிப்பிட்டார்.

# கிறிஸ்மஸ்தீவு முகாமில் மோதல் இலங்கைத் தமிழர் படுகாயம்

(கொழும்பு)

கிறிஸ்மஸ்தீவு அகதிகள் தடுப்பு முகாமில் ஏற்பட்ட மோதல்களில் காயமடைந்த ஈழத்தமிழர் ஒருவர் அவுஸ்ரேலியாவின் பேர்த் நகருக்கு சிகிச் சைக்காகக் கொண்டு செல்லப்படவுள்ளார்.

அவுஸ்ரேலியாவின் குடிவரவுத் திணைக்களம் இதை உறுதிசெய்துள்ளது. கடந்த திங்கட்கிழமை அதிகாலை 1 மணியளவில் கிறிஸ்மஸ்தீவு தடுப்பு முகாமில் இலங்கை, ஈராக்,குவைத் நாடுகளைச் சேர்ந்த எட்டு அகதிகள் மோதிக் கொண்டனர்.

தடுப்பு முகாமின் பணியாளர் ஒருவரே அவர்களுக்கிடையான மோதலை விலக்கி விட்டார். பின்னர் நணபகலில் அதே குழுவினர் மீண்டும் மோதிக்கொண்டதில் ஒருவருக்குப் பலத்த காயம் ஏற்பட்டது.

அவருக்கு தடுப்பு முகாமில் சிகிச்சை அளிககப்பட்டபோதும் மேலதிக சிகிச்சைக்காக பேர்த் நகருக்குக் கொண்டு செல்லப்படவுள்ளார்.

நேற்று முன்தினம் பிற்பகல் 12.30 மணியளவில் இடம்பெற்ற மோதலின் போது ஈழத்தமிழர் ஒருவரின் பற்கள் உடைந்து நொருங்கியதாக அவரது சட்டவாளர் தெரிவித்தார்.

அதேவேளை இந்த மோதலில் மேலும் நான்கு அகதிகளும், ஒரு தடுப்பு முகாம் பணியாளரும் சிறுகாயமடைந்தனர்.

இந்தச் சம்பவத்தை அடுத்து கிறிஸ்மஸ்தீவு தடுப்பு முகாமில் பதற்றமான நிலை காணப்படுகிறது. அவுஸ்ரேலிய காவல்துறையினர் விசாரணைகளை நடத்தி வருகின்றனர்.

தடுப்பு முகாமில் அளவுக்கதிகமானோர் தங்க வைக்கப்பட்டிருப்பதே இந்தப் பதற்றமான சூழலுக்குக் காரணம் என்று அகதிகள் சார்பு அமைப்பு ஒன்று தெரிவித்துள்ளது.

இங்கு 2587 அகதிகள் தடுத்து வைக்கப் பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது.

# யாழ். நகரில் வீதிவிபத்து; இருவர் படுகாயமடைந்தனர்



(யாழ்ப்பாணம்)

யாழ். நகர்ப்பகுதியிலும் புறநகர்ப்பகுதியிலும் நேற்று முற்பகல் இடம்பெற்ற வெவ்வேறு வீதி விபத்துக்களில் இரு வயோதிபர்கள் படுகாயமடைந்துள்ளதுடன், ஒரு துவிச்சக்கரவண்டியும், மோட்டார் சைக்கிள் ஒன்றும் சேதமடைந்தது.

நேற்று நண்பகல் யாழ். வைத்தியசாலை வீதியில் அமைநதுள்ள இலங்கை வங்கிக் கிளைக்கு முன்பாக அவ்வங்கியில் பென்சன் எடுப்பதற்காக மோட்டார் சைக்கிளில் வந்து கொண்டிருந்தவர் மீது ஹயஸ் வாகனம் ஒன்று மோதியதில் அவ்வயோதிபர் படுகாயமடைந்தார். அவர் பயணம் செய்த மோட்டார் சைக்கிளும் சேதமடைந்தது.

இவர் உடனடியாக யாழ். போதனா வைத்தியசாலைக்கு கொண்டுசெல்லப்பட்டு சிகிச்சைக்கு அனுமதிக்கப்பட்டார்.

கொக்குவில் மேற்கு, கொக்குவிலைச் சேர்ந்த ஆர். சந்திரலிங்கம் (வயது 69) என்பவரே படுகாயமடைந்தவராவார்.

இதேவேளை, இச்சம்பவம் குறித்து ஹயஸ் வாகன ஓட்டுநர் பொலிஸாரால் விசாரணைக்குட்படுத்தப்பட்டார்.

மேலும் யாழ். சுன்னாகம் சந்தியில் நேற்று முற்பகல் 11.30 மணியளவில் பாரவூர்தி ஒன்று துவிச்சக்கரவண்டியில் சென்றுகொண்டிருந்த வயோதிபர் மீது மோதியதில் அவ்வயோதிபரின் இரண்டு கால்களும் நசுங்கி அவர் படுகாயமடைந்தார். அவரது துவிச்சக்கரவண்டியும் சேதமடைந்தது.

இதனைத்தொடர்ந்து அப்பகுதியில் நின்றிருந்த இராணுவத்தினரும், பொலிஸாரும் படுகாயமடைந்த வயோதிபரை ஓட்டோ ஒன்றில் ஏற்றி யாழ். போதனா வைத்தியசாலைக்கு அனுப்பிவைத்தனர்.

இணுவில் மேற்கு இணுவிலைச் சேர்ந்த கந்தையா தர்மலிங்கம் (வயது 70) என்பவரே படுகாயமடைந்தார். இச்சம்பவம் குறித்து பொலிஸார் விசாரணைகளை நடத்தினர். (பா)

# —மின்வெட்டு—

உயரழுத்த மின்மார்க்கங்களில் பராமரிப்பு வேலைகள் மற்றும் கட்டமைப்பு வேலைகள் செய்யும் பொருட்டு 12.02.2011 சனிக்கிழமையன்று காலை 8 மணியிலிருந்து மாலை 5 மணிவரை உரும்பிராய், கோண்டாவில், மருத்துவபீட பிரதேசம், திருநெல்வேலிப் பிரதேசம், பட்டணப்பகுதி நீங்கலாக யாழ். மாநகரசபைப் பகுதி மற்றும் புன்னாலைக்கட்டுவன், அச்செழு, புத்தூர், ஆவரங்கால், அச்சு வேலி, இடைக்காடு, வடமராட்சி பிரதேசம் ஆகிய இடங்களிலும்,

13.02.2011 ஞாயிற்றுக்கிழமை யன்று காலை 8 மணியிலிருந்து 5 மணிவரை இணுவில், உடு வில், மருதனார்மடம், தாவடி, கொக்குவில், நாச்சிமார் கோவிலடி, ஆனைக்கோட்டை, நவாலி, மானிப்பாய், சங்குவேலி, கோண்டாவில், கொட்டடி, கோம்பயன் மணல் பிரதேசம், யாழ். பட்டணப்பகுதி ஆகிய இடங்களிலும் மின்விநியோகம் தடைப்பட்டிருக்கும்.வேலைகள் முன்னதாக முடிவுற்றால் குறிப்பிடப்பட்ட நேரத்திற்கு முன்னதாகவும் மின்விநியோகம் வழங்கப்படலாம்.

## யாழ். பொது நூலக....

வேலைகள் இன்று முதல் ஆரம்பிக்கப்படவுள்ளதாகவும் அவர் தெரிவித்தார். ஆப்பிக்கோ இன்டீரியல் நிறுவனம் இப்புனர்நிர்மாண வேலைகளை மேற்கொள்ளவுள்ளது. இதற்கான நிதியினை சிங்கப்பூர் இன்டர்நஷனல் பவுண்டேசன் நிறுவனம் வழங்கியுள்ளது.

இந்நிதியின்மூலம் யாழ். நூலகத்தின் சிறுவர் பகுதியின் தளபாடங்கள் நவீனமுறைப்படி அமைக்கப்படவுள்ளதுடன், கட்டடங்கள் அழகுபடுத்தல் மற்றும் உபகரணங்கள் பொருத்தப்படவுள்ளது.

சிங்கப்பூரில் அமையப்பெற்றுள்ள தற்கால நூலக சிறுவர் பகுதி போன்று இது புனரமைப்பு செய்யப்படவுள்ளது.

அத்துடன் சிறுவர் பூங்கா பகுதியிலும் இருக்கைகள் அமைக்கப்பட்டு சிறுவர்கள் இருந்து நூல்கள் வாசிக்கவும் வசதிகள் செய்துகொடுக்கப்படவுள்ளது. மேலும் இப்புனர்நிர்மாணப் பணிகள் எதிர்வரும் யூன் மாதம் முடிவடையக்கூடிய மாதிரியாக வேலைகள் துரிதப்படுத்தப்படவுள்ளதாகவும் தெரியவருகின்றது. (பா)

## ஆயுதக்கொள்வனவு....

படைத்தளபாட உதவிகளை வழங்கியிருந்தது.

போர் முடிவுக்குவந்துவிட்ட நிலையில் 27 நவம்பர் 2010 அன்று பாகிஸ்தான் ஜனாதிபதி சர்தாரி இலங்கைக்கான பயணம் ஒன்றை மேற்கொண்டிருந்தார். பாகிஸ்தானிய ஜனாதிபதியாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட பின்னர் அவர் இலங்கைக்கு மேற் கொண்ட முதலாவது பயணம் இதுதான். கட்டுநாயக்க வானூர்தி நிலையத்திற்கே சென்ற இலங்கையினது ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச அசீப் அல் சர்தாரியினை வரவேற்றிருந்தார்.

பாகிஸ்தானிய ஜனாதிபதி இலங்கையிலிருந்தபோதும் லண்டனிலுள்ள ஒக்ஸ்போட் யூனியனில் உரைநிகழ்த்துவதற்காக ஜனாதிபதி மகிந்த பிரித்தானியாவினை நோக்கிப் பயணித்தமை கொழும்பினது இராசதந்திர வட்டகைகளில் அதிர்ச்சியினை ஏற்படுத்தியிருந்தது.

குறிப்பிட்டதொரு நாட்டிற்கு யாரேனும் ஒரு அரசுத்தலைவர் வருகை தந்திருக்கும் போது அந்த நாட்டினது ஜனாதிபதி தன்னுடைய நாட்டிலிருந்து வேறொரு நாட்டுக்குப் பயணம் செய்வது முறையற்றதொரு நடைமுறையாகவே அனைத்துலக ரீதியில் கருதப்படுகிறது. இதுபோன்ற செயல் வருகை தந்திருக்கும் அரச தலைவரை அவமதிக்கும் செயற்பாடாகவே கருதப்படும்.

பாகிஸ்தானிய ஜனாதிபதி இலங்கையல் இருக்கும் அதே காலப்பகுதியில் ஒக்ஸ்போட் யூனியனில் உரை நிகழ்த்துவதற்காக ஜனாதிபதி மகிந்த லண்டனுக்குப் பயணமாக வேண்டும் என்பதை இலங்கையினது வெளிவிவகார அமைச்சர் பீரிஸ் நன்கறிவார். இதுபோன்ற சூழமைவில், இலங்கையினது வெளிவிவகார அமைச்சர், சர்தாரியின் பயணத்திகதியினை மாற்றியிருக்க வேண்டும் அல்லது ஜனாதிபதியின் லண்டன் பயணத்தினைப் பிற்போட்டிருக்க வேண்டும். இதுதான் ஒழுங்கான நடைமுறை.

ஆனால் பேராசிரியர் பீரிஸ் எதனையும் செய்யவில்லை. போரின்போது இலங்கை இராணுவத்தின் பெரும் படைத்தளபாடப் பற்றாக்குறையினை எதிர்கொண்டிருந்த போது ஆபத்தில் கைகொடுத்து உதவிய நண்பனாம் பாகிஸ்தானுக்கு நன்றி கூறும் வகையில் அந்த நாட்டினது ஜனாதிபதி இலங்கைக்கு வருகை செய்திருந்தபோது ஜனாதிபதி மகிந்த நாட்டில் இருந்திருக்க வேண்டியது மிகவும் அவசியமானதாகும்.

தான் இலங்கையிலிருந்து வெளியேறுவதற்கு முன்னரே ஜனாதிபதி ராஜபக்ச கொழும்பிலிருந்து பிரித்தானியா நோக்கிப் பயணித்துவிடுவார் என்பதை ஜனாதிபதி சர்தாரி அறிந்திருக்கவில்லையாம் என்ற தகவலும் வெளிவருகிறது.

ஜனாதிபதி சர்தாரி கொழும்புக்கான தனது பயணத்தினை நிறைவுசெய்ததைத் தொடர்ந்து அந்த நாட்டினது இராணுவத் தளபதி கயானி இலங்கைக்கு வந்திருந்தார். இந்த வருகையின் போது ஜனாதிபதி ராஜபக்சவினைச் சந்திப்பதற்கு ஏற்பாடாகியிருந்தது. ஆனால் மகிந்தவோ தனிப்பட்ட பயணமாக திடீரென அமெரிக்காவிற்குப் புறப்பட்டு விட்டார். ஜெனரல் கயானியின் நிகழ்ச்சிநிரலில் ஜனாதிபதி ராஜபக்சவுடனான சந்திபபும் உள்ளடக்கப்பட்டிருந்தமை இங்கு குறிப்பிடத்தக்கது.

பாகிஸ்தானிய ஜனாதிபதி மற்றும் அந்த நாட்டினது இராணுவத் தளபதி ஆகியவர்களின் கொழும்புக்கான பயணம் முக்கியமானதாம் என இலங்கையின் அரச தரப்பினர் கூறுகிறார்கள்.

அப்படியாயின் இவர்களை அவமதிக்கும் வகையில் ஜனாதிபதி ராஜபக்ச ஏன் வெளிநாட்டுப் பயணங்களை மேற்கொண்டார்.போர் முடிவுக்கு வந்துவிட்டபின்னரும் தங்களிடமிருந்து இலங்கை தொடர்ந்தும் படைத்தளபாடங்களைக் கொள்வனவு செய்வேண்டும் என பாகிஸ்தான் அழுத்தம் கொடுத்ததுதான் இதற்குக் காரணமாம் என அரச தரப்பினர் புதுவிளக்கம் தருகிறார்கள்.

பாகிஸ்தானிய ஜனாதிபதி இலங்கைக்கான பயணத்தினை மேற்கொண்டிருந்த போது, இலங்கைக்குத் தொடர்ந்தும் படைத்தளபாடங்களை விநியோகிப்பதற்கான வாய்ப்புகள் தொடர்பாக பாகிஸ்தான் ஆராய்வதாக அந்த நாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டிருந்தன.

ஜனாதிபதி சர்தாரியினது கொழும்புக்கான பயணத்தின்போது பாகிஸ்தானியப் படைத்தளபாடங்களைக் கொள்வனவு செய்யுமாறு அவர் இலங்கையினது அதிகாரிகளிடம் கோரியதாக தகவல்கள் கூறுகின்றன. இலங்கைக்கான படைத்தளபாட விநியோகத்தின் போது பாகிஸ்தானிய ஆயுத விற்பனை இடைத்தரகர்களும் மற்றும் பாதுகாப்பு ஒப்பந்தகாரர்களும் பெரும் நன்மையடைவதுதான் பாகிஸ்தானின் கோரிக்கையின் பின்னால் உள்ள இரகசியம் எனப்படுகிறது. இலங்கை தனது படைத்தபளாடங்களைத் தொடர்ந்தும் கொள்வனவு செய்யும் என பாகிஸ்தான் நம்பியது. தனது பயணத்தின் பின்னர் இதுதொடர்பான வாய்ப்பினை மீண்டும் ஆராய்வதற்காகவே ஜனாதிபதி சர்தாரி தனது இராணுவத்தளபதியினை கொழும்புக்கு அனுப்பியிருந்தார். ஆனால் ஜனாதிபதி மகிந்தவினது அமெரிக்காவிற்கான தனிப்பட்ட திடீர்பயணம் பாகிஸ்தானின் இந்த முயற்சியினைப் பாதித்துவிட்டது.

போர் மூர்க்கமாகத் தொடர்ந்து கொண்டிருந்தபோது பாகிஸ்தான் மாத்திரம் இலங்கைக்குப் படைத்தளபாட உதவிகளை வழங்கவில்லை. மாறாக சீனாவும் பெருந்தொகையான படைத்தளபாடங்களைச் இலங்கைக்கு வழங்கியிருந்தது.

இந்த நிலையில் கொழும்பு தன்னிடமிருந்தும் ஆயுத தளபாடங்களைக் கொள்வனவு செய்யவேண்டுமென சீனாவும் வலியுறுத்துவதாகத் தெரிகிறது. இதுபோல ரஷ்சியாவும் இலங்கைகு அதிக படைத்தளபாடங்களை விற்பனை செய்திருந்தது.

## வடக்கிற்கு....

மாவட்டங்களில் தெரிவு செய்யப்பட்ட பாதைகள் கொங்கிரீட் கொண்டு நிர்மாணிக்கப்படவுள்ளன.

இதற்கான விபரங்களை மாவட்ட உள்ளூராட்சி ஆணையாளர்களிடம் இருந்து கோரப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகி றது. ஒவ்வொரு மாவட்டத்திலும் 25 கிலோமீற்றர் நீளமான பாதைகள் இவ் வாறு கொங்கிரீட் கொண்டு நிர்மாணிக்கப்படவுள்ளன.

## ஆசிய அபிவிருத்தி...

பிரான்ஸ் அபிவிருத்தி நிறுவனமும் வழங்குகின்றன.இது தொடர்பான உடன்படிக்கை ஒன்று அரசுக்கும் மேற்படி இரு நிறுவனங்களுக்கும் இடையில் கடந்த செவ்வாய்க்கிழமை கைச்சாத்திடப்பட்டுள்ளது.

அரசின் சார்பில் நிதியமைச்சின் செயலாளர் பி.பி. ஜயசுந்தரவும் இரு நிறுவனங்களினதும் சார்பில் அவ்வங்கியின் இலங்கைக்கான பணிப்பாளர் கலாநிதி ரிச்சேர்ட் டபிள்யூ. சொக்ஸ் ஆகியோரும் உடன்படிக்கையில் கைச்சாத்திட்டனர்.இத்திட்டத்தின் மூலம் சுமார் 30 இலட்சம் பேர் நன்மை அடைவார்கள் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

## எங்களுக்கும்வேண்டும்....

வலுச்சேர்க்கும் வகையில் இப்போராட்டம் இலங்கை வங்கி ஊழியர் சங்கத்தினால் ஒழுங்கு செய்யப்பட்டிருந்தது.

இலங்கை வங்கி, மக்கள் வங்கி, தேசிய சேமிப்பு வங்கி, அரச ஈட்டு முதலீட்டு வங்கி ஆகியவற்றின் ஊழியர்கள் இப்போராட்டத்தில் ஈடுபட்டனர்.

யாழ். மத்திய பேருந்து நிலையத்திற்கு முன்பாகவும், சாவகச்சேரி பஸ் நிலையத்திற்கு முன்பாகவும், வல்வெட்டித்துறையிலும், சுன்னாகம் சந்தியிலும், ஊர்காவற்றுறையிலும் இத்தகைய போராட்டங்கள் அரச வங்கி ஊழியர்களால் நடத்தப்பட்டன.

யாழ். மத்திய பேருந்து நிலையத்தில் நேற்று நண்பகல் 12.30 மணிமுதல் 1.30 மணிவரை நடைபெற்ற இவ் ஒரு மணி நேரப் போராட்டத்தில் பெருமளவான அரச வங்கி ஊழியர்கள் கலந்துகொண்டனர்.

இப்போராட்டத்தின்போது தமக்கான பென்சன் திட்டத்தை நடைமுறைப்படுத்துமாறு கோரி அரச வங்கி ஊழியர்கள் சுலோக அட்டைகளைத் தாங்கியவாறும், கோஷங்களை இசைத்தவாறும் போராட்டத்தில் ஈடுபட்டனர். இப்போராட்டத்தின் தொடர்ச்சியாக இன்றும் அரைநாள் பணிப்புறக்கணிப்பில் அரச வங்கி ஊழியர்கள் ஈடுபடவுள்ளனர்.

இப்போராட்டத்தின்தேவை குறித்து இலங்கை வங்கி ஊழியர் சங்கப் பிரதிநிதி ஒருவர் கருத்துத் தெரிவிக்கையில் -

1993 ஆம் ஆண்டுக்கு முன்பாக அரச வங்கிகளில் கடமையாற்றும் ஊழியர்களுக்கு பென்சன் வழங்கப்பட்டு வருகின்றது. அதற்குப் பின்பாக சேவையில் சேர்த்துக்கொள்ளப்பட்ட வங்கி ஊழியர்களுக்கு அரச வங்கிகளை தனியார் துறையினரிடம் கையளிக்கும் திட்டத்தின்கீழ் அவர்கள் பென்சன் திட்டத்தில் சேர்த்துக்கொள்ளப்படவில்லை.

இருந்தபோதும் வங்கிகள் தொடர்ந்தும் அரசுடைமையாகவே இருந்து வருகிறது. இந்நிலையில் எமது உரிமையை விட்டுக்கொடுக்க நாம் தயாரில்லை. எமது ஊழியர்களுக்கு முன்பிருந்த நடைமுறையின்படி பென்சன் வழங்கவேண்டும் என்று கோருகிறோம்.

இப்போராட்டம் வெற்றியைத் தராத போது இலங்கை பூராவும் நாம் எமது உரிமைக்காக போராட்டம் நடத்துவோம் எனவும் தெரிவித்தார். (பா,52)

## புலம்பெயர்...

நெருக்கடிகளை துணிச்சலுடன் எதிர்கொண்டு சமாளிக்கக்கூடிய ஆற்றல் வெளிநாடுகளிலுள்ள இராஜதந்திரிகளிடம் இல்லை என்று பிரித்தானியாவைத் தளமாகக் கொண்டு இயங்கும் சிங்கள அமைப்பு ஒன்று அரசு மீது குற்றம் சுமத்திவந்தது.

இந்த நிலையில் இலங்கை அரசு பிரித்தானியாவிலுள்ள இலங்கைத் தூதரகத்தில் பணியாற்றும் இலங்கைத் தூதுவர் உட்பட பல அதிகாரிகளை இடமாற்றம் செய்து புதியவர்களை நியமிப்பதற்கு முடிவுசெய்தது.

எனினும் இந்த விடயத்தில் பிரித்தானிய அரசும் சில உத்தியோகப்பற்றற்ற நிபந்தனைகளை இலங்கை அரசுக்கு விடுத்திருந்தது. அதாவது புலிகளுடனான இறுதி யுத்தத்தின்போது இடம்பெற்றதாகக் கூறப்படும் யுத்தக் குற்றங்களில் சம்பந்தப்பட்டவர்களை இப்பதவிகளுக்கு நியமிப்பதை பிரித்தானிய அரசு விரும்பவில்லை.


இதனால் முன்னாள் கடற்படைத் தளபதி வசந்த கரன்னகொட பிரித்தானியாவுக்கான தூதுவராக நியமிக்க எடுக்கப்பட்ட முயற்சிகள் இறுதி நேரத்தில் கைவிடப்பட்டது. அதேபோல பாலித்த ஹோகன்னவும் இப்பதவியை ஏற்றுக்கொள்ள மறுத்துவிட்டார்.

இவ்வாறான நெருக்கடியான சூழலிலேயே இந்த இராஜதந்திர சிக்கலுக்கு பொருத்தமான பொறிமுறை ஒன்றின் மூலம் தீர்வை எட்டுவதற்காக இந்திய உளவு அமைப்பின் உதவி நாடப்பட்டது.

தற்போது றோ உளவு அமைப்பு வகுத்துக்கொடுத்த புதிய இராஜதந்திர பொறிமுறைக்கமைய நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டிருக்கிறது.

இதன்படி இதுவரைகாலமும் சென்னையில் உள்ள துணைத் தூதரகத்தில் துணைத்தூதுவராகப் பணியாற்றிய வரும், இந்திய உளவுத்துறையுடன் நெருங்கிய உறவுகளைப் பேணிவருவதா கக் கருதப்படுபவருமான கே.பத்மநாதன் தற்போது பிரித்தானியாவுக்கான தூதுவராக நியமிக்கப்பட்டிருக்கிறார்.

கடந்த 1996 ஆம் ஆண்டு இலங்கையின் இராஜதந்திர சேவையில் இணைந்துகொண்ட இவர் பல ஆசிய நாடுகளில் உள்ள தூதரகங்களில் கடந்த காலத்தில் பணியாற்றியிருக்கிறார். இவரின் நியமனத்தின் ஊடாக புலம்பெயர்ந்த தமிழர்களின் அரசுக்கெதிரான உணர்வலைகளைக் கையாள்வதற்கு வெளிவிவகார அமைச்சு இந்திய உளவு அமைப்புடன் இனிவரும் காலத்தில் நெருங்கிச் செயற்படவுள்ளது.



# பின்தங்கிய பாடசாலை மாணவர்களும் போட்டிகளில் பங்குகொள்ள வேண்டும்

## ஈ.பி.டி.பி.யின் யாழ்.மாவட்ட அமைப்பாளர் கமலேந்திரன்

(யாழ்ப்பாணம்)

பின்தங்கிய பாடசாலை மாணவர்களும் தேசிய மட்ட விளையாட்டுப் போட்டிகளில் பங்குகொள்ள வேண்டுமெனவும் ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் யாழ். மாவட்ட அமைப்பாளர் கந்தசாமி கமலேந்திரன் (கமல்) அவர்கள் தெரிவித்தார்.

நேற்று மந்துவில் றோமன் கத்தோலிக்க தமிழ் கலவன் பாடசாலையின் இல்லங்களுக்கு இடையிலான மெய்வல்லுநர் போட்டி நிகழ்விற்கு பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர் மேற் கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், யாழ். மாவட்டத்தில் பின்தங்கியுள்ள மற்றும் கஷ்டப்பட்ட பிரதேச மாணவ மாணவியர்களும் தேசிய மட்ட விளையாட்டுப் போட்டிகளில் பங்குகொண்டு பிரகாசிக்க வழிவகுத்தவர் எமது அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவே எனத் தெரிவித்தார்.

இந்த வகையில் எதிர்காலத்தில் எமது பிரதேசத்தில் பின்தங்கியுள்ள மற்றும் கஷ்டப்பட்ட பாடசாலைகளில் இலைமறை காயாக இருக்கும் விளையாட்டுத் துறையினரை இனங்கண்டு அவர்களை வெளிக்கொண்டு வரவேண்டுமெனவும் கேட்டுக் கொண்டார்

கடந்த காலங்களைப் போல் பல சலுகைகளை பெற்றுத்தருவதாகக் கூறி மக்களை மீண்டும் அதல பாதாளத்துக்கு கொண்டு செல்லும் வகையில் செயற்பட்டிருந்த சுயலாப அரசியல்வாதிகள் எமது குடாநாட்டு மக்களுக்கு எதனையும் வழங்கியிருக்கவில்லை என்பதை தெளிவுபடுத்தியதுடன், எமது இனத்தை அழித்தொழிப்பதற்கான பயங்கரவாத செயற்பாடுகளுக்கு துணைபோயிருந்ததாகவும் தெரிவித்தார்.



இந்தவகையில், எமது மாணவச் செல்வங்கள் பாடசாலை விளையாட்டுப் போட்டிகளுக்கு அப்பால் தேசிய மட்டத்திலும் ஏன் சர்வதேச மட்டத்திலும் பிரகாசிக்கும் நாள் வெகு தொலைவில் இல்லையெனவும் ஈ.பி.டி.பி. யாழ்.மாவட்ட அமைப்பாளர் கமலேந்திரன் மேலும் தெரிவித்தார்

தொடர்ந்து வெற்றி பெற்ற இல்லங்களுக்கான வெற்றிக் கேடயங்களையும் வெற்றியீட்டிய மாணவர்களுக்கான பரிசில்களையும் வழங்கி வைத்தார்.

பாடசாலையின் அதிபர் பவளேந்திரன் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் தென்மராட்சி கோட்டக் கல்வி அதிகாரி சிவாநந்தம் இளைப்பாறிய அதிபர் பாலசுப்பிரமணியம் ஈ.பி.டி.பி.யின். சாவகச்சேரி பிரதேச பொறுப்பாளர் வலன்டைன் (சந்திரன்) கட்சியின் உறுப்பினர் விஸ்வா உட்பட பெருமளவிலானோர் கலந்து கொண்டனர்.

### கட்டுநாயக்கா விமான நிலையத்திற்கு

# நான்கு மணித்தியாலத்திற்கு முன்பாக வருமாறு அறிவிப்பு

பண்டாரநாயக்கா சர்வதேச விமான நிலையத்திலிருந்து வெளிநாட்டுக்குச் செல்லும் பயணிகள் விமானம் புறப்படும் நேரத்தைவிடக் குறைந்தபட்சம் 4 மணித்தியாலங்களுக்கு முன்பாக வீட்டிலிருந்து புறப்படுமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

இலங்கை கனேடிய நட்புறவுப் பாலம் நாளை 12ஆம் திகதி சனிக்கிழமை முதல் நாளை மறுதினம் 13ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை வரை தற்காலிகமாக மூடப்படவுள்ளதால் ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸ் நிறுவனம் இந்த அறிவுறுத்தலை விடுத்துள்ளது.


விமான நிலையத்தை அடைவதற்கு மாற்றுப்பாதைகளை பயன்படுத்துமாறு கோரப்பட்டுள்ளதுடன், விமான நிலையத்திற்கு வரும் வாகனங்களுக்கு பொலிஸாரும் வழிகாட்டுவர் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

# மழை வெள்ளத்தால் சேதமடைந்த வீடுகளின் மீள் புனரமைப்புக்கு 100 மில்லியன் ஒதுக்கீடு

(கொழும்பு)

மழையினால் சேதமடைந்த வீடுகளை மீள புனரமைப்பதற்காக 100 மில்லியன் ரூபாய் களை ஒதுக்கீடு செய்யவுள்ளதாக தேசிய கட்டடத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

இதற்கான தீர்மானம் கட்டட நிர்மாணம் மற்றும் பொறியியல்துறை அமைச்சர் விமல் வீரவன்ச தலைமையில் இடம் பெற்ற கூட்டத்தில் எடுக்கப்பட்டுள்ளது.



புதிய சந்தைக்கான கட்டடத் தொகுதி அமைப்பதற்கான அடிக்கல் நாட்டு விழா நேற்று கஸ்தூரியார் வீதியில் நடைபெற்றது போது, யாழ். மாநகர மேயர் திருமதி யோகேஸ்வரி பற்குணராஜா, யாழ்ப்பாண அரசாங்க அதிபர் திருமதி இமெல்டா சுகுமார், யாழ்.மாநகரசபை பிரதி மேயர் இளங்கோ (றீகன்) அடிக்கல்லினை நாட்டி வைபபதனைக் காணலாம். (மி)

இதேவேளை, பாதிக்கப்பட்ட வீடுகளை புனரமைப்பதற்கு வர்த்தக சமூகம் ஒத்துழைக்க வேண்டும் எனவும் அமைச்சர் இதன்போது கோரிக்கை விடுத்துள்ளார்.

இயற்கை அனர்த்தம் காரணமாக வடக்கு கிழக்கு உட்பட நாட்டின் பல பாகங்களிலும் 3,717 வீடுகள் முழுமையாகவும் 23 ஆயிரத்து 780 வீடுகள் பகுதியளவிலும் சேதமடைந்துள்ளன.

நேற்றைய கணிப்பீட்டின்படி மூன்று லட்சத்து 36 ஆயிரத்து குடும்பங்களை சேர்ந்த 12 லட்சத்து 56 ஆயிரத்து 900 பேர் வெள்ளத்தால் பாதிக்கப்பட்டார்கள். அனர்த்தத்தில் 17 பேர் கொல்லப்பட்டதுடன் இரண்டு பேர் காணாமல் போயினர். 11 பேர் காயமடைந்திருந்தனர்.

திருகோணமலை, மட்டக்களப்பு உட்பட்ட பல இடங்களில் பெருமளவான வயல் நிலங்கள் முழுமையான அளவு அழிவுற்றுள்ளன.

### புலிகளுக்கு....


அந்தப்பட்டியலை கவனத்துக்கு எடுத்துக் கொண்டு விசாரணைகளை துரிதப்படுத்துமாறு அரச சட்டவாதிக்கு நீதிபதி உத்தரவிட்டார்.

புலிச் சந்தேக நபர்களை காலவரையறையின்றி தடுப்புக்காவலில் வைத்திருப்பது ஒரு சட்டவிரோதமான செயல் என்று தெரிவித்த பிரதம நீதியரசர், அவர்களுக்கு எதிராக வழக்குப் பதிவு செய்வதா அல்லது விடுதலை செய்வதா என்பது தொடர்பாக துரித தீர்மானங்களை எடுக்குமாறும் அரச சட்டவாதிக்கு உத்தரவிட்டார்.

பயங்கரவாத தடுப்புச் சட்டத்தின்கீழ் கைது செய்யப்பட்ட ஆயிரத்துக்கும் அதிகமான தமிழர்கள் தற்போது பூசா முகாமில் தடுத்துவைக்கப்பட்டிருப்பதாகவும் இவர்களில் பெரும்பாலானவர்கள், 2007 ஆம் ஆண்டுக்கு பிறகு கைது செய்யப்பட்டவர்கள் என்றும் சட்டமா அதிபர் திணைக்கள வட்டாரங்கள் தெரிவித்தன.

# கேள்விகளுக்கு விடை அளிப்பதற்கு அமைச்சர்கள் சமூகமளிப்பது அவசியம்

(கொழும்பு)



நாடாளுமன்றில் நடைபெறும் விவாதங்களுக்குப் பதிலளிப்பதற்கு உரிய அமைச்சுக்கள் நாடாளுமன்றுக்கு வருகை தருவதில்லை. இதனால், கேள்வி நேரத்தில் வெற்றுக் கதிரைகளே காணப்படுகிறது என சபாநாயகர் சமல் ராஜபக்ஷ தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் எம்.பிக்களால் கேட்கப்படும் முக்கியமான கேள்விகளுக்கு பதிலளிப்பதற்கு சம்பந்தப்பட்ட அமைச்சர்கள் சபைக்கு சமுகமளித்திருப்பது அவசியம் என சபாநாயகர் சமல் ராஜபக்ஷ நேற்று வலியுறுத்தியுள்ளார்.

### வடக்கு–கிழக்கு மாகாணங்களில்

# வரலாற்றுச் சிறப்புமிக்க பிரதேசங்கள் பாதுகாப்பு

வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் அமைந்துள்ள வரலாற்றுச் சிறப்புமிக்க பிரதேசங்களைப் பாதுகாக்க அரசாங்கம் நடவடிக்கை எடுத்துள்ளது.

கடந்த கால இயல்பற்ற சூழ்நிலையால் இந்த இடங்கள் கவனிப்பார் அற்றிருந்தன.

இந்தநிலையில், பல இடங்களில் அகழ்வாராய்ச்சிப் பணிகளும் முன் எடுக்கப்படுகின்றன.

தேசிய மரபுரிமை அமைச்சின் தகவல்களின்படி திரியாய் மற்றும் குச்சவெளி கோணேஸ்வரம் கோயில் போன்ற இடங்கள் இந்தத் திட்டத்திற்கு அமைய பாதுகாக்கப்படவுள்ளன.

### ஐ.ம.சு.கூட்டமைப்பின்

# வேட்புமனு செவ்வாய் பரிசீலனைக்கு ஏற்பு

(கொழும்பு)

மஹரகம நகர சபைக்கென ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு தாக்கல் செய்த வேட்புமனுவை நிராகரிக்குமாறு கோரி ஐக்கிய தேசியக் கட்சி தாக்கல் செய்த மனுவை எதிர் வரும் செவ்வாய்கிழமை பரிசீ லிக்க மேன்முறையீட்டு நீதி மன்றம் தீர்மானித்துள்ளது.

ஐக்கிய தேசியக் கட்சியின் பொதுச் செயலாளர் திஸ்ஸ அத்தநாயக்கவினால் தாக்கல் செய்யப்பட்ட மேன்முறையீட்டு மனு நேற்றுப் பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டபோதே இத்தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

மனுவில் பிரதிவாதிகளாகக் குறிப்பிடப்பட்டுள்ளவர்களுக்கு முன்னறிவித்தல் கடிதம் அனுப்புமாறு மேன்முறையீட்டு நீதிமன்றத் தலைவர் சத்தியா ஹெட்டிகே உத்தரவிட்டுள்ளார்.

அதன் பின்னர், மனுவை எதிர்வரும் செவ்வாய்க்கிழமை பரிசீலிப்பதாக அவர் அறிவித்தார்.

மஹரகம நகர சபைக்கென ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு தாக்கல் செய்துள்ள வேட்புமனு தேர்தல் சட்டத்திற்கு மாறானதென திஸ்ஸ அத்தநாயக்க தனது மனுவில் குறிப்பிட்டுள்ளார்.

வேட்பு மனுவை நிராகரிக்குமாறு தேர்தல் தெரிவத்தாட்சி அதிகாரியிடம் கோரியபோதும், அவர் அதனை பொருட்படுத்தாது வேட்பு மனுவை ஏற்றுக் கொண்டதாக அவர் கூறியுள்ளார்.

எனவே தேர்தல் சட்டத்திற்கு முரணான ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் மஹரகம நகர சபைக்கான வேட்புமனுவை நிராகரிக்குமாறு திஸ்ஸ அத்தநாயக்க தனது மனுவில் கேட்டுக் கொண்டுள்ளார்.

# இந்தியா-இலங்கைக்கு இடையிலான படகுச்சேவை இன்று ஆரம்பம்

(கொழும்பு)

யுத்தம் நிறைவடைந்ததன் பின் இலங்கை மற்றும் இந்தியாவிற்கு இடையிலான முதலாவது படகுச் சேவை இன்று முதல் ஆரம்பிக்கப்படவுள்ளதாக இந்திய ஊடகங்களில் செய்தி வெளியாகியுள்ளது.

இதன்படி 300 தொன் பொருட்களுடன் கொழும்பை நோக்கி இந்தியாவிலிருந்து இன்றைய தினம் படகு தன் பயணத்தை ஆரம்பிக்கவுள்ளது.

எம்.வி.என்.ராஜ்.ரிபிஎன் 241 என்ற படகே இவ்வாறு இலங்கை நோக்கி பயணிக்கவுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

குறித்த படகு இலங்கைக்கு 24 மணி நேரத்தில் வந்தடையும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

# தங்கம் திருடிய குற்றச்சாட்டில் பொலிஸார் மூவர் கைது!

(கொழும்பு)

பம்பலப்பிட்டியிலுள்ள ஹோட்டலொன்றில் 2 மில்லியன் ரூபாய் பெறுமதியான தங்கப் பொருட்களை திருடிய குற்றச்சாட்டின் பேரில் பொலிஸார் மூவர் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

கல்கிசை நீதிமன்றத்தில் நேற்று வியாழக்கிழமை ஆஜர் படுத்தப்பட்டுள்ள இச்சந்தேக நபர்களை இன்று வரை விளக்க மறியலில் வைக்குமாறு உத்தரவிடப்பட்டுள்ளது. இன்று இவர்கள் அடையாள அணிவகுப்புக்கு உட்படுத்தப்படவுள்ளனர்.

இப்பத்திரிகை இல.373 பிரதான வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் அமைந்துள்ள அற்புதன் அச்சகத்தில் 2011 பெப்ரவரி 11 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.